1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Telegrams:
"CATHOLIC PRESS"
JAFFNA.

Telephone:
NO. 100

# சத்தியவேத பாதுகாவலன்

" கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம் "

77-ம் புத்தகம் 14-ம் இல. யாழ்ப்பாணம் 1952-ம் ஆண்டு சித்திரைமாதம் 17-ந் திகதி வியாழக்கிழமை—பிரதிசதம் 10

## சிந்தைக்கினிய சிந்தாமணியும் தெவிட்டாஇன்பத் தேம்பாவணியும்

சிந்தைக்கினிய சிந்தாமணியும், தெவிட்டா இன்பத் தேம்பாவணியும் என்பது, ஈண்டு எடுத்துக்கொண்டு ஆராயப் புகுந்த தலையங்கமாம். சிந்திக்குந்தோறும் சிந்தைக்கு இனிமையைப்பயப்பது சிந்தாமணியும், புருடார்த்தங்கள் நான்கனுள், அந்தமிலின்பத் தழிவற்றதாய, வீட்டின்பத்தைக் காட்டிக்காட்டி, பக்திக் கனலை மூட்டி மூட்டி, பைந்தமிழ்ப்பாவாய் உண்டைகள் சமைத்து ஊட்டி ஊட்டிநிற்பது தேம்பாவணியும் எனவே, 'சிந்தைக்கினிய' 'தெவிட்டாஇன்ப' என்னும் அடைமொழிகளிரண்டும் குறித்த தலையங்கத்தின்கண் பொருத்தமுறவே இடம் பெற்று நிற்பனவாகும்.

'சிந்தாதமணி' என்பது 'சிந்தாமணி' எனவும், 'தேம்பாதஅணி' என்பது 'தேம்பாவணி' எனவும் முறையேஎதிர்மறைப் பெயரெச்சங்களைத் தமக்கு அடைமொழிகளாய்க் கொண்டு, சிந்தாதும் தேம்பாதும் யாண்டுமொரே பெற்றித்தனவாக நின்று நிலவுதல்கண் கூடு.

'சிந்தாமணி' என்பது நுகர்தற்கு வேண்டும்பொருளை, வேண்டினோர் வேண்டியவாறே தரவல்லதோர் தேவமணி. 'தேம்பாவணி' என்பது இடையீடில்லா மதுவொழுக்கோடு கூடி அன்றலர்ந்த மலர்க்கோலமாய்நின்று, நறுமணங்கமழ்வதோர் வாடாமாலிகை. உண்மையே உண்மை! 'சிந்தாமணி' ஓர் நந்தாமணி, ஓர் பிந்தாமணி, ஓர் விந்தாமணி. அதைப் போன்றே, 'தேம்பாவணி'யும் ஓர் தீம்பாவணியும், கூம்பாவணியும் என்க.

சொல்லினிமை, பொருளாழமுடைமை, சுவையுடைமை முதலிய தன்மைகளால், பிற்காலத்துத் தோன்றிய கம்பராமாயணம் முதலிய காவியங்கட்கு வழிகாட்டியாகச் "சிந்தாமணி" அமைந்துள்ளது போன்றே, "திருவாக்குப் புராணம்", "இரட்சண்ய யாத்திரிகம்", "இரட்சண்ய மனோகர" மாதியாங் கிறீஸ்தவ காவியங்கட்கும் 'தேம்பாவணி' என்னும் தெவிட்டாத இன்பத்தெள்ளமுதானது முதனூலாகும் மாபெருஞ் சிறப்புடைத்தாயிற்று.

'சிந்தாமணி'-க்கு முதனூலாக க்ஷத்ரசூளாமணி, சத்தியசிந்தாமணி, ஜீவந்தரநாடகம் என்னும் வடநூல்களை, சமணர்கூறுவதை ஒப்பவே, 'தேம்பாவணி'-க்கு முதனூலாக, விவிலிய வேதம் என்னுஞ் சத்திய திருமறையைக் கிறீஸ்தவஉலகம் கொண்டுள்ளது. 'சிந்தாமணி'யினது உறுப்புக்களாம் பதின்மூன்று இலம்பகங்களிலும் காப்பியத் தலைவனாகிய சீவகனது பல்வேறு மணக்காதைகளே கூறப்பெற்று, அது ஓர் 'மணநூல்' என்னும் பெயரால் வழங்குவதுபோன்றே, தாவீது மன்னன், சிமியோன்முனிவர், சூசைமாதவன், மரியம்மையாராதியோரது இல்லற, துறவற விசேடங்களையும், தெய்வீக இலக்கணங்களையும் வெள்ளிடைமலையையொப்ப எடுத்துக்காட்டுந்திறம்பற்றித் 'தேம்பாவணி'

" நுண்மாணி "

என்பது ஓர் 'குணநூல்' என்னும் பெயரால் வழங்கப்பெறலாகும்.

பன்னிருகோத்திரப் பிதாக்களிலொருவராய 'யூதா' என்பவரது கோத்திரத்தே தாவீது மன்னனது பரம்பரையில் வந்தவர்களாகிய யாக்கோபு, நீப்பி என்னு மிருவர்க்கும் அருந்தவப் புதல்வனாகப் பிறந்தகுழந்தையானது 'சூசை' என்னும்வடமொழிக்கு நிகரான பொருளையுடைய 'வளன்' எனத் தமிழ்ப் பெயரிடப்பெற்றது. தாயாகிய 'நீப்பி' என்பாள் அக்குழந்தையைக் கையிலேந்தி, ஆண்டவனது திருப்பாத தாமரையிலிட்டு அத்தியந்த பக்தி வினயத்துடனே அர்ப்பணித்து ஆசிமாரி வேண்டியிரந்து நின்றபோழ்தில், "வாடாத அருளையடைந்த இம்மகவு அறநெறியிலசையாது நிலைகொண்டு என்மார்பி லணிவதற்கேற்றதோர் 'தேம்பாவணி'யாய்த் திகழும்" என ஓர் அசரீரி செவிப்புலனாக, அதேபோழ்தில் அந்தரத்தினின்றும் பூமாரித் தாரைகள் பொழியப்பெற்றனவென்ப.

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

## சவேரியாரின் திருமேனிக்காட்சி

அர்ச். பிரான்சீஸ் சவேரியார் சான்சியன் தீவிலே மரணமடைந்த நான்காம் நூற்றாண்டு விழா ஞாபகார்த்தமாகப் பொம்யேசு ஆலயத்திலே அவரின் அழிவுறாத் திருமேனியானது இவ்வாண்டு மார்கழிமாதம் 3-ந் திகதி முதல்ஒருமாதகாலம்வரையில் பகிரங்கமாகக் காட்சிக்கு வைக்கப்படுமென்று கோவை நகரின் பத்திரியாக்குவான டொன்ஜோஸ் டாகொஸ்ரா நூனெஸ் ஆண்டவர் விடுத்த மேய்ப்பர்நிருபம் ஒன்றில் அறிவித்திருக்கின்றார். அந்தநிருபத்தில் அவர் மேலும்தெரிவித்திருப்பதாவது:

"அர்ச். பிரான்சீஸ் சவேரியாரின்கல்லறை தனது மாபெரும் பொக்கிஷமெனக் கோவைநகர் மனதிற்கொள்ளுகின்றது. அதனைக்கொண்டிருப்பதானது தன்மக்களின் சமாதானத்திற்கும், நல்வாழ்விற்குமாக அந்நகர் அளிக்கும் சிறந்தஉத்தரவாதமாய் இருக்கின்றது. இத்திருப்பண்டம் கோவைநகரைவிட்டு வெளியேறப்போகிறதென்று ஆதாரமற்ற ஊர்க்கதை ஒன்று பிறந்தபோது பிறசமயத்தவர் தானும் கவலைகொண்டவர்களாய் அதையிட்டுப்பலமாக எதிர்த்துநின்றார்கள். கோவைநகர் அர்ச். பிரான்சீஸ் சவேரியாருக்குச் சொந்தம்."

கோவைநகர் வாசிகளுக்கும், அதற்குவெளியே வசிக்கிறவர்களுக்கும் விசுவாசத்தில் தளராதிருக்கும் வரப்பிரசாதத்தையும், குடும்பங்களில் சமாதானத்தையும், தேசங்களிடையே ஒற்றுமையையும், அத்துணை அநேக கோடிக்கணக்கான அஞ்ஞானிகள் மனந்திரும்புதலையும், திருச்சபைக்கு வெற்றியையும், கிறீஸ்துவேதத்தின் இரண்டாயிரவருடகால நிர்மாண வேலையை அங்குமிங்குமாக அழித்தும், சனசமூகத்தின் அமைப்பை வஞ்சனையாற் கெடுத்தும்வருகின்ற நாஸ்திகதத்துவத்தின்மீது கிறீஸ்தவ தத்துவங்களுக்கு ஜெயமும் தேவனிடமிருந்து பெற்றளிக்குமாறு அர்ச். பிரான்சீஸ் சவேரியாரைப்பார்த்து மன்றாடிவருமாறு கோவைக் கத்தோலிக்கரைக்கேட்டு ஆண்டவர் அவர்கள் தமது நிருபத்தை முடித்திருக்கின்றார்.

## சர்வதேச சற்பிரசாத மகாநாடு

அடுத்துநிகழும்வைகாசிமாதம் 27-ந்திகதி சாயந்தரம் பார்சலோனாநகரிலே ஆரம்பமாகவிருக்கின்ற சர்வதேச சற்பிரசாத மகாநாட்டுக்குத் தம்முடைய பிரதிநிதியாக அர்ச். பேதுருவானவர் மகாலயத்தின் அதிமேற்றிராணியாரான கருதினல் ரெடெஸ்சினி ஆண்டவரைப் பரிசுத்தபாப்பரசர் நியமனஞ்செய்திருக்கின்றார். ஸ்பானிய உள்நாட்டுயுத்தத்துக்கு முன் 14 வருடகாலமாக இக்கருதினல்ஆண்டவர் மதிரித்நகரிலே பாப்பரசரின் ஸ்தானீகராய் இருந்தார். பதினொராம்பத்திநாதபாப்பானவர் 1933-ம்ஆண்டின் தொடக்கத்தில் இவரை ஓர்கருதினலாக்கினார். ஆயினும், இவரை மதிரித்நகரிலே இன்னமும் கொண்டிருக்கவேண்டுமெனவிரும்பிய அவர் 1935-ம் ஆண்டின் இறுதிவரையிலே இவர் கருதினலாக்கப்பெற்றதை அறிவிக்கவில்லை. ரோமாபுரிக்கு வெளியே பரிசுத்தவருடமுடிவு விழாவைபவம் பாத்திமாபதியில் நடைபெற்றபோது, பாப்பரசரின் பிரதிநிதியாக இவர் அதற்குத் தலைமைவகித்தபிறகு சென்றஐப்பசிமாதம் ஸ்பெயினையும் கண்டுதிரும்பினார். மகாநாட்டின் திருவைபவங்களிலே ஸ்பானியகடற்படை, தரைப்படை அதிகாரிகளாய் 5,000 பேர்வரையில் கலந்துகொள்வார்களென எதிர்பார்க்கப்படுகிறது. லண்டனிலிருந்து கருதினல் கிறிவ்வின் ஆண்டவர் மகாநாட்டுக்குச் சமுகமளிக்கவிருக்கின்றார். ஐரோப்பியநாடுகளிலிருந்தும், அமெரிக்க ஐக்கிய தேசத்திலிருந்தும் மற்றும் ஒருதொகையான கருதினல்மார் சமுகமளிக்கவிருக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதேச வர்த்தமானம்

## கவர்னர்-ஜெனறலின் பயணம்

கவர்னர்-ஜெனறல் சோல்பறிபிரபு அவர்கள் பிரதமர் டி. எஸ். சேனநாயக அவர்களின் மரணத்தாலே தமது விடுமுறையை இடையிலே நிறுத்திவிட்டு இலங்கைக்குத்திரும்பினூர். பின்னர் சென்ற 4-திகதிகாலே தமது விடுமுறையைக் கழிப்பதற்காக ஆகாயவிமானத்திலே லண்டன்நகர் செல்லலாயினர்.

## ஐக்றிங் கவர்னர்-ஜெனறல்

சோல்பறிபிரபு விடுமுறையில் திரும்பவும் லண்டன்நகர் சென்றமையாலே அவரிடமாகப் பிரதமநீதியரசரான சேர் அலன்றேஸ் அவர்கள் சென்ற 4-ந்திகதி தொடக்கம் அரசாங்க பரிபாலனஞ் செய்துவருகின்ருர். அன்று முதல் தமதுஇடமாக ஐக்றிங் பிரதம நீதியரசராகக் கடமைபார்க்கும்படி அவர் பிரதம உபநீதியரசரான சங். செல்லப்பா நாகலிங்கம் அவர்களை நியமனஞ் செய்திருக்கின்ருர்.

## தனிச்சங்க தலைவர்

யாழ்ப்பாணம், சென்வின்சென்ற் டி போல்சபைத் தருமபந்திகளின் தனிச்சங்க தலைவராயிருந்து காலஞ்சென்ற திரு. ஆர். ஜே. போல் அவர்களிடமாகச் செவாலியர் எஸ். அருளானந்தம் அவர்கள் நம்மேற்றிராணியாண்டவர் அவர்களால் நியமனஞ்செய்யப் பெற்றிருக்கிருரென அறிந்து சந்தோஷமானேம்.

## அர்ச். சூசையப்பர்பந்தி

யாழ்ப்பாணம், சென்வின்சென்ற் டி போல்சபை அர்ச். சூசையப்பர்பந்தியின் 44-வதுவருடப் பொதுக்கூட்டம் சென்ற 6-4-52 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் சம்பத்திரிசியார்கல்லூரி மண்டபத்தில் மகாவந். மேற்றிராணியாண்டவர்அவர்கள் தலைமையில் நடந்தேறியது. அத்தருணம் காரியதரிசியால் அறிக்கை படித்துக்காட்டப்பட்டபின் "தருமத்தின் அவசியம்" என்பதுபற்றிச் செவாலியர் எஸ். அருளானந்தம் அவர்களாலும், "தருமபந்திகளின் சேவை" என்னும்விடயம்பற்றிப் பலாலி ஆரசினர்ஆசிரியகலாசாலை அதிபர் திரு. பி. சவிரிமுத்து அவர்களாலும் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டன. அப்பால் திரு. என். கிறகரி, ஆசிரியர் எல். கிறேஷியன், ஆசிரியர் எஸ். அந்தோனிப்பிள்ளை என்பவர்களாலே பந்தியின் தொண்டுகள்பற்றிக் குறிப்புரைகள் கூறப்பட்டன. ஈற்றிலே மேற்றிராணிஆண்டவர் அவர்களின் தலைமையுரையுடனும், பந்தியின் தலைவர நன்றியுரையுடனும் கூட்டம்நிறைவாயிற்று.

## யாழ்ப்பாணச் சுப்பிறீங்கோடு

யாழ்ப்பாணச் சுப்பிறீங்கோட்டிலே ஐந்தாவதாய், அளவெட்டிக் கொலைவழக்கு சங். கிளேயர் சுவான் நீதியரசர்முன் விசாரணைக்கு வாலாயிற்று. இதிலே அருணுசலம் இராமமூர்த்தி என்னும் ஒருவர் சென்றவருடம் புரட்டாதிமாதம் 19-ந் திகதி தனது மாமனுன மயில்வாகனம் முத்துத்தம்பியை ஓர் கத்திகொண்டு வயிற்றில்குத்திக் கொலைசெய்தாரென வழக்குத்தொடரப்பட்டிருந்தார். விசாரணையின்போது எதிரி கைபிழைபாடாக அக்கொலையைச்செய்தாரென்பது ஒப்புக்கொள்ளப்பெற்று நான்குவருடக் கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டனர்.

ஆறுவதாய், குரும்பசிட்டியிலே பொன்னுத்துரை, நன்னிக்குட்டி, செல்லத்துரைஎனும் மூவர் சேர்ந்து வைத்திலிங்கம் என்பவரைக் கொலைசெய்தார்களெனக் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்டிருந்தவழக்கு விசாரணைக்குவந்து, முடிவிலே முதலாம் எதிரி கைபிழைபாடாக அக்கொலையைச் செய்தாரென்பது ஒப்புக்கொள்ளப்பெற்று, இருவருடக்கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டனர். ஏனையஇருவரும் இருவருட நன்னடத்தைப்பிணையில் விடப்பட்டனர்.

ஏழாவதாய், மன்னார்ப்பகுதியைச் சேர்ந்த காத்தான்குளத்திலே இராமலிங்கம் மணிஆசாரி என்பவர் சென்றவருடம் கார்த்திகைமாதம் 25-ந்திகதியன்று தனதுமனைவியான குப்பம்மாவை ஓர் கொடுவாட்கத்திகொண்டு கண்டதுண்டமாகவெட்டிக் கொன்றபிறகு அவள் உடலை மண்ணெண்ணெய்ஊற்றிக் கொழுத்திவிட்டானென்று குற்றஞ்சாட்டித் தொடரப்பட்டிருந்த கொலைவழக்கு விசாரணைக்குள்ளாயிற்று. ஈற்றில், எதிரி சித்தபேதமுடையராய்த் தன்னைத்தற்காக்கக்கூடிய நிலைமையில் இல்லையென்று யூரிமார் ஏகமனதாகக் கூறியதின்பேரில் இந்தக்குரூரகொலையைச்செய்த மணிஆசாரியைப் பைத்தியகாரர்சாலையிலே விளக்கமறியலில் வைக்கும்படி தீர்ப்பாயிற்று.

எட்டாவதாய், வண்ணர்பண்ணையிலே சென்றவருடம் ஐப்பசிமாதம் 1-ந் திகதியன்று எஸ். பாலசிங்கம் என்ற பகிரங்கவேலைப்பகுதி ஒப்பந்தகாரரை அரிவாளால் வெட்டிக்கொன்றதாகக் கொக்குவிலைச்சேர்ந்த சின்னப்பொடி ஆறுமுகம்என்ற ஒரு தொழிலாளிமீது தொடரப்பட்டிருந்தவழக்கு விசாரணைக்குள்ளாய், எதிரி கொலைக்குற்றவாளியென்று யூரிமார் ஏகமனதாகத் தீர்ப்புக்கூறியமையால் மரணதண்டனை விதிக்கப்பட்டனன். இத்துடன் யாழ்ப்பாணச்சுப்பிறீங்கோடு முடிவடையலாயிற்று.

## ஐ. தே. கட்சிஅபேட்சகர்கள்

அடுத்துவரும் பாராளுமன்றபொதுத்தேர்தலிலே ஐக்கியதேசியக்கட்சி அபேட்சகர்களாய்த் தெரிவுக்கு நிற்கும்படி இதுவரை 69 தொகுதிகளுக்கு ஆட்கள் நியமனஞ்செய்யப் பெற்றுள்ளார்கள். பாராளுமன்றம் கலைக்கப்படு முன்னரே காலியான அக்குறெசாஸ்தானத்துக்கு ஐக்கியதேசியகட்சியானது கம்யூனிஸ்த தலைவரான டக்றர் எஸ். ஏ. விக்கிரசிங்கவுக்குப் போட்டியாக அவருடைய மைத்துனரான செனற்றர் விஜெசிங்க அவர்களை இப்போது நியமனஞ்செய்துள்ளது. இவர் மாத்தறைப்பகுதியிலே பெரிய காணி பூமிக்காரர். இவரை நியமனஞ்செய்ததும் கம்யூனிஸ்ததலைவரான இவர்மைத்துனர் இவருடன் போட்டியிட உடன்படுவோராயில்லை. அதனுல் கம்யூனிஸ்த கட்சி அவருடன் போட்டியிடுமாறு மற்ருெருவரை ஒப்பாசாரத்துக்கு நியமனஞ்செய்யவிருக்கின்றது.

## சதாசிவம் கொலைவழக்கு

கறேஜ் கொலைவழக்குஎனப் பிரஸ்தாபமாக அறியப்பட்டுவந்த சதாசிவம் கொலைவழக்கு விசாரணை கீழ்க்கோட்டிலே சென்ற 9-ந்திகதிமுடிவாயிற்று. அதன்விளைவாய் இலங்கையின் பிரசித்திபெற்ற கிறிக்கெற்பந்தைய விளையாட்டுக்காரரான எம். சதாசிவம் தனது மனைவியான ஆனந்தத்தைச் சென்றவருடம் ஐப்பசிமாதம் 9-ந்திகதியன்று கொலைசெய்ததாகச் சுப்பிறீங்கோட்டுவிசாரணைக்குப் பாரப்படுத்தப்பட்டிருக்கின்ருர். அவருடைய வேலைகாரனுன வில்லியம்என்பவனும் இக்கொலைக்கு உடந்தையாய் இருந்தானென்று குற்றஞ்சாட்டிச் சுப்பிறீங்கோட்டு விசாரணைக்குப் பாரப்படுத்தப்பட்டிருக்கின்ருன். கீழ்க்கோட்டிலே இந்தக்கொலைவழக்கு விசாரணை 74 தினங்களாக நடைபெறலாயிற்று. எல்லாமாக 101 சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டார்கள். கொலையுடன் சம்பந்தப்பட்ட 78 பொருட்கள் கோட்டிலே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

## சிகறெற்புகையிலை நிலையம்

வடஇலங்கையிலே மிகப்பெரிய சிகறெற்புகையிலைத் தொழிற்சாலை மாவிட்டபுரத்திலே சுமார் ஐம்பதினுயிரம் ரூபாசெலவில் அமைக்கப்பட்டிருக்கிறது. இதுஅமைந்துள்ள காணியானது கமத்தொழிற்பகுதியால் பத்துவருட உடன்படிக்கையிலே குத்தகையாக வாங்கப்பட்டுள்ளது. இத்தொழிற்சாலை பிரதானமாக விசேஷ இனப்புகையிலையை உணர்த்திப் பதப்படுத்துவதற்கேயாகும். இதுசொந்தமாக நாற்றுப்பாத்திகளையும் கொண்டுள்ளது. இதிலே நாற்றிடப்படும் புகையிலைக்கன்றுகள் கமக்காரருக்கு ஆயிரம் நான்குரூபாவீதம் விற்கப்படுகின்றன. யாழ்ப்பாணக்கமக்காரர் இந்தப்புகையிலையையே அதிகமாகச் செய்யும்படி தூண்டப்பட்டு வருகிருர்கள். ஏனெனில், தின்புகையிலை இனங்களைப்பார்க்கிலும் இந்தப் புகையிலையைச்செய்யக் கூலியாட்செலவோ, பசளைச்செலவோ மிகவும் குறைவாகத்தான் முடிகின்றன. அத்துடன் குறைந்தகாலத்திலே இப்புகையிலைக்கன்றுகள் பூரணவளர்ச்சி அடைகின்றன. இன்னும் இந்தப்புகையிலையை உணர்த்துமிடங்களில் பச்சையாக நிறுத்துக்கொடுத்து உடனுக்குடனே பணமும் பெற்றுக்கொள்ளலாம். சிகறெற்றுக்குப் பாவிக்கக்கூடிய வகையிலே இந்தப்புகையிலை உணர்த்திப் பதப்படுத்தப்பட்டுச் சிகறெற் உற்பத்தி செய்யும்கம்பெனிகளுக்கு மொத்தமாக விற்கப்படுகின்றது.

## ஒரு கோழிமுட்டையால்

கனதுல்லாவைச்சேர்ந்த படஙகேதர எனும்கிராமத்திலே சென்றவருடம் புரட்டாசிமாதம் 9-ந் திகதியன்று சாளோசிங்கோஎன்பவன் தன்மனைவியைநோக்கி புஞ்சிசிங்கோ, எமானிஸ் பெறேரு, ஆரோன்அப்பு எனும் மூவரும்இருக்கும் கடைஒன்றில் தனது கோழிகளில்ஒன்று இட்ட முட்டையைக் காணவில்லையெனக் கூறினன். அப்போது அவர்களில் மூன்ரும்ஆள் தான் அந்தமுட்டையைத் திருடவில்லையெனக்கூறினன். பிந்த ஓர் பொலிஸ்காரர்வந்து, சச்சரவு செய்யாது அப்பாலேபோகும்படி சாளோசிங்கோவைக் கேட்டுக்கொண்டார். பின்னர் அன்றுசாயந்தரம் சாளோசிங்கோ வீட்டுக்குத் திரும்பிவந்ததும் முன்சொன்னமூவரிலும் இரண்டாம் ஆள் அவனைஅதட்டிப்பேசவே, அவன் வீட்டைவிட்டு அப்பாற்போகும்போது இரண்டாம்ஆளும், மூன்ரும்ஆளும் அவனைஇழுத்துச்செல்ல, முதலாம்ஆள் ஓர்தடிகொண்டு அவனைக் கழுத்தில் அடிக்கவே அவன் இறந்துபோயினன். இந்தக்கொலைவழக்குக் கண்டிச் சுப்பிறீங்கோட்டிலே சென்ற 9-ந் திகதி விசாரணைசெய்யப்பெற்று, இரண்டாம் மூன்ரும்எதிரிகள் சுத்தவாளிகளாக, முதலாம்எதிரி கடுங்காயம் உண்டுபண்ணியதில் குற்றவாளியாகி மூன்றுமாத வெறும்மறியல்தண்டனை விதிக்கப்பட்டனன்.

## மீளவும் போட்டியிடுகின்றூர்

1947-ம்ஆண்டு நிகழ்ந்த பாராளுமன்றப் பொதுத்தேர்தலிலே றுவான்வெலைத்தொகுதியில் லங்கா சமசமாஜ கட்சித்தலைவரான டக்றர் என். எம். பெறேருவுடன் போட்டியிட்டுத் தோல்வியடைந்த ஐக்கியதேசியக்கட்சி அபேட்சகரான திரு. பி. சி. இம்புலாணு என்பவர் அடுத்துவரும் பொதுத்தேர்தலிலே திரும்பவும் அவருடன் போட்டியிட முன்வந்திருக்கின்ருர். இவர் திரும்பவும் ஐ. தே. கட்சிஅபேட்சகராக றுவான்வெலைத் தொகுதிக்கு நியமனஞ்செய்யப் பெற்றிருக்கின்ருர். சென்ற பொதுத்தேர்தலின்போது இந்தத்தொகுதியில் மூன்று அபேட்சகர்கள் போட்டியிட்டார்கள். இவர்களில் திரு. இம்புலாணு இரண்டாம் ஆளாக வந்தார்.

## திருமண வைபவம்

கிளிநொச்சி, நீர்ப்பாசனபகுதியில் உத்தியோகம் வகித்திருப்பவரான திருநிறைசெல்வன் சி. வி. பி. பெறேய்ரு அவர்களுக்கும், யாழ்ப்பாணம், சம்பத்திரிசியார்கல்லூரி ஆசிரியர் சி. டபிள்யு. டி. அல்வீனெஸ் தம்பதிகளின் புதல்வியும், யாழ்ப்பாணம், திருக்குடும்பகன்னிகாமடத்து ஆங்கிலகலாசாலையில் ஓர் ஆசிரியையும், தற்போது றோமாபுரியிலே குருப்பட்டத்துக்குரிய வேதசாஸ்திரங்கள் பயின்றுவருகிறவரான வண. காஸ்றன் அல்வீனெஸ் பிறதர் அவர்களின், சகோதரியுமான திருநிறைசெல்வி எடனு அவர்களுக்கும் சென்ற 15-ந்திகதி செவ்வாய்க்கிழமை காலை பரிசுத்தகொஞ்சேஞ்சிமாதாவின் ஆசனக்கோவிலிலே அநேக குருப்பிரசாதிகளும், ஆசிரியர் ஆசிரியைகள், மற்றும் பிரமுகர்களும் திரளாகக் குழுமியிருந்த சமுகத்திலே மணவாளியின் மாமனுரான வண. ஜோர்ஜ் வாம்பெக் சுவாமியவர்களால் திருமணவைபவம் மங்கலகரமாக நிறைவேறியது. அதன்மேல் பாடகர்குழாம் இனிதே ஞானகீதங்கள் இசைக்கச் சுவாமியவர்களால் திவ்விய பூசை நிறைவேறியது. அதன்மேல் புதியதம்பதிகள் ஆலயத்தைவிட்டு வெளிகொண்டதும் புஷ்பாரங்கள் சூட்டப்பெற்றுப் பிரதிமைப்படங்கள் பிடிக்கப்பட்டு மோட்டார்காரூடராய் ஊர்வலமாக மணமகள் மன்றல்மனைசேர்ந்து சம்பிரமமாக வரவேற்கப்பெற்ருர்கள். அத்தருணம் பிரக்கிராசியார் அல்பிறெட் சுவாம்பிள்ளை அவர்கள் எழுந்து புதியதம்பதிகளின் பெருமைவாய்ந்த குடும்பங்களைப்பற்றிக் கவர்ச்சிகரமாகப் பேசி அங்குபிரசன்னமாயிருந்தாரின் நாமத்தினுலே புதுமணத்தம்பதிகளுக்குச் சோபனங்கூறினின்ருர். இப்புதிய குடும்பமானது அஷ்டஐஸ்வரியங்களும் பெற்றுச் சிறந்துவாழ அமலன் திருவருள்பாலிப்பாராக!

## திருமண உற்சவம்

நம்பட்டணவாசரும், வனபரிபாலன பகுதியில் கிளாக்குவாயிருந்து இளைப்பாறியவருமான ஜே. மனுவேல்பிள்ளை தம்பதிகளின் புதல்வியும், யாழ்ப்பாணத்திலே பலராலும் நன்கறியப்பெற்ற கட்டடநிர்மாணியான திரு. ஜே. ஜோண்பிள்ளை அவர்களின் பெருமகளுமான திருவளர்செல்வி மேரி மற்றில்டாவுக்கும், கற்பிட்டி ரவுண்உடையாராய் விளங்கியிருந்த திரு. ஏ. ஏ. இராசையாஅவர்களின் புதல்வரும், கைத்தொழிற்பகுதியில் உத்தியோகம் வகித்திருப்பவருமான திருவளர்செல்வன் ஏ. ஆர். எஸ். இராசரத்தினத்துக்கும் 16-ந்திகதியாகிய நேற்றுப்புதன்கிழமை காலை பரிசுத்த கொஞ்சேஞ்சிமாதாவின் ஆசனக்கோவிலிலே இனசனர், சிநேகிதர், மற்றும்பிரமுகர்கள் பெருந்திரளாகக் கூடியிருந்தசமுகத்திலே மணவாளியின் சுற்றத்தவரான வண. ஜேக்கப் அலெக்சாண்டர் சுவாமியவர்களால் திருமணவைபவம் சிறப்பாகநிறைவேறியது. பின்னர் பெண்மணிகள்பாடகர்குழாம் இன்பகீதங்கள் இசைக்கச் சுவாமியவர்களால் திவ்வியபூசை நிறைவேறியது. அதன்மேல் புதியதம்பதிகள் நறுமலர்மாலைகள் சூட்டப்பெற்று, பிரதிமைப்படங்கள் பிடிக்கப்பட்டு, மோட்டார்காரூடராய்ப் பவனியாக மணமகள் இல்லஞ்சேர்ந்து பரிமளிப்பாக உபசரிக்கப் பெற்ருர்கள். அவ்வமையம் பாராளுமன்றத்திலே கோப்பாய்ப் பிரதிநிதியாயிருந்த திரு. சி. வன்னியசிங்கம்அவர்கள் புதியதம்பதிகளுக்குச் சோபனங்கூறியவிடத்து அவர்களின் குடும்பங்களைப்பற்றிய விசேஷங்களை எடுத்துக்கூறினின்ருர். இப்புதியகுடும்பமானது பதினுறும்பெற்றுப் பெருவாழ்வுவாழ எல்லாம்வல்ல இறைவன் திருவருள் பாலிப்பாராக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aayanaham.org

# கத்தோலிக்க சமாச்சாரம்

### குருவானவரும் கொலைஞனும்

பிரான்சிலே திஜோன் நகரின் குருமேயரான கனன் கிர்சுவாமியார் 1944-ம் ஆண்டு தம்மைச்சதிமானமாகக் கொல்லஎத்தனித்த ஒரு மனிதனுக்கு உயிர்ப்பிச்சை அருளவேண்டுமெனச் சென்ற 8-ந்திகதியன்று நடைபெற்ற இராணுவநீதிஸ்தல விசாரணையின்போது பரிந்துபேசலாயினர். சென்ற மகாயுத்தம் நடைபெற்றகாலத்திலே பிரான்சின் வடபாகம் ஜேர்மனியரின் ஆதிக்கத்தில் இருந்தபோது கனன் கிர்சுவாமியார் அந்நகரின்மேயராகத் தெரியப்பெற்று, ஜேர்மன் அதிகாரிகளுக்குத் தலைவணங்காது வீரத்துவமாக நின்று தமதுநகரைப் பரிபாலித்துவந்தமையால், ஜேர்மன் இரகசியப் பொலிசர் அவரைக்கொன்றுவிடச் சதிசெய்தனர். அவர்களால் ஏவப்பட்ட சதிகாரன் ஒருவன் அவர்மேல்சுட்டபோது தேவாதீனமாக அவர் காயத்துடன் உயிர்தப்பிக்கொண்டார். அவரைச் சுட்டவனாகிய மார்செல் லஞ்ஞோஎன்பவன் சமீபத்திலே பிரான்சிய பொலிசர் கைப்பட்டான். இராணுவநீதிஸ்தலத்தில் விசாரணைநடைபெற்றது. அங்குசமுகமாயிருந்த கனன் கிர்சுவாமியார் தாம்அவனுக்கு மன்னிப்புஅளித்துவிட்டதாகக்கூறி அவனுக்கு மரணதண்டனை விதியாதிருக்கும்படி நீதிபதிகளை இரந்துகொண்டார். அதன்பேரில் அவன் ஆயுள்பரியந்த கடுமூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டனன்.

### விசுவாசிகளான மிஷனரிமார்

குருமாரல்லாத சாதாரண கத்தோலிக்கரை மிஷனரிமாராகப் பயிற்றியெடுப்பதற்கென்று மதிரித்நகரிலே ஓர் கல்லூரியை அமைப்பதாக ஸ்பானிய கல்வி மந்திரியாரான திரு. ஜி. மெனெஸ்அவர்கள் வாககளித்திருக்கின்றார். இது அர்ச். பிரான்சீஸ் சவேரியார் பரமபதம் அடைந்த நான்காம்நூற்றாண்டு விழாவை ஞாபகப்படுத்துவதாயிருக்கும். இந்தக்கல்லூரி டக்றர்மார், ரசாயன பண்டிதர்கள், நேர்ஸ்மார், இஞ்சினீர்மார், மற்றும்பல்வேறு நிபுணர்களையும் மிஷனரிமாராகப் பயிற்றியெடுக்கும். காலகதியிலே பிறநாடுகளிலிருந்து, விசேஷமாய் இந்தியா, சீனாவிலிருந்து மாணவர்களைத் தருவித்துப் பயிற்சியளிக்கும்.

### கத்தோலிக்கரான பிரதமர்

ஏர்ணக்குள அதிமேற்றிராசனத்தைச்சேர்ந்த ஓர் கத்தோலிக்கரான திரு. ஏ. ஜே. ஜோண்அவர்கள் திருவிதாங்கூர் - கொச்சி இராச்சியத்திலே காங்கிரஸ் கட்சியால் ஆக்கப்பெற்ற புதியமந்திரிசபையில் பிரதம மந்திரியாராக நியமனஞ் செய்யப்பெற்றிருக்கின்றார். கேரளத்திலே காங்கிரஸ்கட்சியைச் சேர்ந்த காலங்கண்டதலைவர்களில் ஒருவரான இவர் சுதந்திரத்திற்குமுற்பட்ட காலத்திலே அரசியற்சுதந்திர இயக்கத்தில் ஈடுபட்டும், பின்னர் மந்திரிபதவி வகித்திருந்தும் நாட்டுக்கு நெடுங்காலம் சேவைசெய்திருக்கின்றார். இவர் ஓர் உத்தம கத்தோலிக்கர். அப்போது, அரசியல் இயக்கத்தில் ஈடுபட்டிருந்த காலத்திலும், மந்திரியாராகக் கடமையாற்றிவந்த காலத்திலும் தினமும்இவர் திவ்விய பூசை காணவும், தேவநற்கருணை பெறவும் தவறியதில்லை.

### மனந்திரும்பிய பாதிரிமார்

தென்னாபிரிக்காவுக்குக் கிழக்குப்பக்கமாய் இந்துசமுத்திரத்திலுள்ள பிரித்தானிய சான்ஸிபார்தீவிலுள்ள அங்கிளிக்கன் புரொட்டஸ்தாந்தசபை மேற்றிராசனத்தில் மிஷனரிமார்களாகத் தொண்டாற்றிய அங்கிளிக்கன் பாதிரிமார்கள் இருவர் டாறெஸ்-சலாம்விக்காரியத்தைச் சேர்ந்த கத்தோலிக்க மிஷனரிமாராக அதேபகுதியில்தானே சமீபத்தில் தொண்டாற்றவிருக்கின்றனர். இங்கிலாந்தைச் சேர்ந்த கனம். எச். டென்னிஸ் அவர்களும், அவர் தோழரும் தங்கனைக்கா நாட்டைச்சேர்ந்த கிபலப்பிலா எனுமிடத்தில் தாங்கள்படித்துவந்த வெள்ளைக்குருமாரின் சுதேசகுருமடத்தில் சென்ற பங்குனி 23-ந்திகதி ஞாயிற்றுக்கிழமை எட்கார் மேற்றிராணியாரால் குருத்துவாபிஷேகஞ் செய்யப்பெற்றிருக்கின்றனர். இவர்கள் இருவரும் தாங்கள் முன்னர் அங்கிளிக்கன் பாதிரிமாராக அத்துணைநெடுங்காலம் தொண்டாற்றிவந்த அதேபகுதியிற்றானே திரும்பவும் தொண்டாற்றிவரவிருக்கின்றனர்.

### காலஞ்சென்ற கருதினல்

இத்தாலியிலே பொலொஞ்ஞாநகர் அதிமேற்றிராணியாராய் விளங்கியிருந்தவரும், 80 வயசுடையவருமான கருதினல் நசல்லி-றொக்கா தே கோர்னெலியானோ ஆண்டவர் காலஞ்சென்று விட்டாரெனச் செய்திகிடைத்திருக்கிறது. இவர் நெடுங்காலமாகக் கத்தோலிக்கசேவைத் தலைவராயும், 56 வருடம் ஓர் குருவாயும், 44 வருடம் ஓர் மேற்றிராணியாராயும் இருந்தார். அப்போது பொலொஞ்ஞாநகர் மேற்றிராணியாராயிருந்த பதினைந்தாம் ஆசீர்வாதப்பர் பாப்பானவர் தாம் திருச்சபைத் தலைவராகித் தெரியப்பெற்றதும் இவரை அந்நகர் அதிமேற்றிராணியாராக 1921-ம் ஆண்டு நியமனஞ் செய்தார். இருவருடங்களின்பின் ஓர் கருதினலாக்கப்பெற்றார். இவர் பிரபுக்கள் குடும்பம் ஒன்றில் பிறந்தவர். இவரின் மரணத்தாலே திருச்சபையிலுள்ள கருதினல்மாரின் தொகை மேலும் குறைந்து 48 பேராகியிருக்கிறது. இற்றைக்கு ஆறுவருடங்களின்முன் பரிசுத்த பாப்பரசர் நடத்திய கருதினல்மார் திருச்சங்ககூட்டத்திலே 32 கருதினல்மாரை ஆக்கியதுமுதல் இதுவரை 21 கருதினல்மார் காலஞ்சென்றிருக்கின்றனர்.

# தியானசபைக் கன்னியர் வருகை

## சிலாபமேற்றிராசனத்தின் மற்றோர் தேவாசீர்வாதம்

அர்ச். ஆசீர்வாதப்பர்சபைத் தியான சபைக்கன்னியர்கள் (Benedictine Contemplative Nuns) அறுவர் இத்தாலிதேசத்திலுள்ள நேப்பிள்ஸ் நகரிலிருந்து சென்றமாதம் 28-ந்திகதி கப்பலேறி இம்மாதம் 11-ந்திகதி கொழும்புவந்து சேர்ந்துள்ளனர். இவர்களின்தாய்மடம் இத்தாலியில் உள்ளது.

இக்கன்னியர்கள் இங்கேதங்கிவசிப்பதற்காகச் சிலாபமேற்றிராசனத்திலுள்ள வென்னப்புவ என்னும்கிராமத்தில் ஓர்மடம் கட்டப்பட்டிருக்கிறது. இந்தமடத்தைக் கட்டுவதற்குப் பண உதவிபுரிந்தவர்கள் திருவாளர்கள் டவ்ளிவ். கே. ஜோன் பெர்ணாண்டோ, சாள்ஸ்பெர்ணாண்டோ, மைக்கல் பெர்ணாண்டோ, பீற்றர் பெர்ணாண்டோ என்ற நான்கு சகோதரர்களுமே. இவர்கள் திரு. டவ்ளிவ். கே. ஜகிரியாஸ் பெர்ணாண்டோ மூப்பனாரின் மக்கள். இவர்களோடு இதற்காகப் பெரிதும்முயற்சித்தவர் திருமதி. ஜெட்றூட்குறே எனும் மாதுசிரோமணியே.

தியானசபைக் கன்னியர்கள்என்றால் யாரென்பதை நம்மவருட்சிலர் இன்னும் நன்றாய் அறியாதிருக்கலாம். அதனால் அவர்களைப்பற்றிய சில குறிப்புகள் நன்மை பயக்கக்கூடும். நமது சத்தியதிருச்சபையிலே தியானசபை, கருமசபையென இருவகைக் கன்னியர்சபைகள் உள்ளன. தியானசபையார் அடிக்கடி தியானயோகநிலையை அடைவாராகையால் யோகசபையாரென்றும், பூரணமவுனம் அனுசரிக்கிறபடியால் மவுனசபையாரென்றும் பெயர்பெறுவர். கருமசபையைச் சேர்ந்தவர்கள் ஞானோபதேசம், உலகசாஸ்திரம், கைத்தொழில் படிப்பித்தல், அநாதைகள்,வயோதிகர், நோயாளரைப்பராமரித்தல் முதலிய வேலைகளில் ஈடுபட்டு வேதவிருத்திக்காக உழைப்பர்.

தியானசபையாரோ, தேவசந்நிதானத்தைச் சூழ்ந்துநின்று இடையறாது கடவுளைத்தியானித்துத் தேவநேசத்தால் எரிந்துகொண்டிருக்கும் பத்திச்சுவாலகர் என்னும் சம்மனசுகளுக்கு ஒப்பாய்த் தேவநற்கருணைச் சந்நிதானத்திலே நித்திய ஆராதனை செய்துகொண்டிருப்பர். ஞானாதிக்கர்என்ற சம்மனசுகளைப்போல் தேவபரம இரகசியங்களைப்பற்றி மிகஉந்நதவகையாய்த் தியானிப்பர். உலகில் சருவேசுரனுடைய மகிமைதோத்திரத்துக்கெதிராய்நடக்கும் அக்கிரமங்களுக்குப் பரிகாரமாகக் காலமுறைதவறாது கடவுளை வாழ்த்தித்துதித்துப் புகழ்கூறுவர். மனுஷர் தங்கள்நாவினால் கட்டிக்கொள்ளும் பாவங்களுக்கு நிந்தைப் பரிகாரஞ்செய்ய வெளிமனுஷரோடு சற்றும்புழங்காமல், வீண்கதைகளால் காலம்போக்காமல் எப்போதும் மவுனம்அனுசரிப்பர். பாவிகள்மேல்வரக்கூடியதேவகோபாக்கினியைநீக்கும்படியும், நிறுத்தும்படியும் இடைவிடாமல் செபதப ஒறுத்தல்முயற்சி செய்வர். தாங்கள்வசிக்கும் மடத்துக்குவெளியே ஒருபோதும்போகமாட்டார். தங்கள் செபஉதவியைக் கேட்பவர்களுக்காக எப்போதும் கடவுளைஇரந்து மன்றாடிக்கொண்டிருப்பர். சுவிசேஷபுத்திமதிஎன்னும் தரித்திரம், கற்பு, கீழ்ப்படிதல் வார்த்தைப்பாடுகளை மிக உத்தமவிதமாய்க்கொடுத்து அனுசரிப்பர்.

இந்த மவுனசபைக்கன்னியர்கள் கடவுளுக்காக யாவற்றையுந்துறந்து, இவ்வுலகில் பாவமில்லாது அனுபவிக்கக்கூடிய சுகசந்தோஷங்களை முதலாய் விட்டுவிட்டு, அவரைமாத்திரம் எந்நேரமும்நினைத்து, அவரையேநேசித்துவரும விசேஷசிநேகிதர்களாகையால் கடவுளும் இவர்களை விசேஷவகையாய் நேசித்து, இவர்கள்கேட்கும் மன்றாட்டுகளுக்கு உடனுக்குடனே செவிகொடுக்கிறார். இவர்கள் யாருக்காக மன்றாடுகிறார்களோ அவரவருக்குத் தேவையானவற்றை அவரும் கொடுத்தருளுகிறார். இவ்வகையான நன்மைகள் பயக்கும் கன்னியர்மவுனசபையொன்று சிலாபமேற்றிராசனத்தில் அமைக்கப்படுவது அம்மேற்றிராசனத்துக்கே பெரியதேவாசீர்வாதமாகும். அதைச்சேர்ந்த வேதபோதகருக்கும் விசுவாசிகளுக்கும் கணக்கில்லாநன்மை வருவதற்குவழியாகும்.

இக்கன்னியர்சபையைச் சிலாபமேற்றிராசனத்தில் ஸ்தாபிக்க வெகுகாலமாக முயற்சித்தவர், சிலாபமேற்றிராணியாரான மகாவந். எட்மன் பீரிஸ், O. M. I. ஆண்டவரே. இந்த நன்முயற்சி அனுகூலமாக அவருக்கு மிகவும் உதவிசெய்தவர், கண்டி மேற்றிராசனத்திலிருந்து பெல்ஜியதேசத்துக்குப்போய் அங்குள்ள அர்ச். ஆசீர்வாதப்பர் தியானசபையைச்சேர்ந்த வண. பெனடிக் அல்ப்பாட் என்னும் குருவானவரே. ஸ்ரீலங்காவின் முதற் சுதேச மேற்றிராணியாராய் அபிஷேகம்பெற்ற மகா. வந். எட்மன் பீரிஸ் ஆண்டவர் தம் மேற்றிராசனத்தில் கடமையாற்றத் தொடங்கிய காலந்தொட்டுச் சிலாபமேற்றிராசனம் வருடந்தோறும் விருத்தியின்பாதையிலே முன்னேறிக்கொண்டு செல்கின்றது. அங்கு பலவகையான சந்நியாச, கன்னிகா சபைகளைச் சேர்ந்த பெருந்தொகைப்பட்டோர் கடமையாற்றுகின்றனர். குருக்களாய்வரும் மாணவர்நிவாசம், அநாதசாலைகள், கைத்தொழிற்சாலைகள், உயர்தரக்கல்லூரிகள், ஆங்கில, சிங்கள, தமிழ்ப்பாஷைகளில் பலபாடசாலைகள் புதிதாகத்திறக்கப்பட்டுள்ளன. சென்றவருடம் வயோதிகர்சாலை ஒன்று ஸ்தாபிக்கப்பெற்று ஓர்ஐரோப்பிய கன்னியர்சபையிடம் ஒப்பிக்கப்பட்டது. இவைகள் யாவற்றாலும் செய்யப்படும் நன்முயற்சிகளுக்கு உற்சாகமும, தைரியமும் கிடைக்கும்படியாக மவுனசபைக் கன்னியர்மடமும் ஸ்தாபகமாகப்போகின்றது.

இத்தகைய கன்னியர்சபையைப் பாதுகாத்து விருத்திசெய்ய வேதபோதகரும், விசுவாசிகளும் மிக உதாரகுணத்தோடு உதவிபுரிவார்கள் என்பதிற் சந்தேகமில்லை. இக்கன்னியர்களுக்கான இல்லிடத்தை ஆயத்தஞ்செய்ய உதவிபுரிந்த உதாரகுணம் பொருந்திய கொடையாளரும், இதற்காக முயற்சித்த யாவரும் சருவேசுரனுடைய விசேஷ ஆசீர்வாதங்களைப் பெறுவதோடு இவ்வுலகிலும் மங்காப் புகழை அடைவரென்பது திண்ணம்.

### ஐ. தே. கட்சியைச் சேருகின்றார்

பாராளுமன்றத்திலே பண்டாரவளைப்பிரதிநிதியாயும், எந்தக்கட்சியையும்சேராத சுயேச்சை அங்கத்தவராயும் இருந்துவந்த திரு. கே. வி. நடராஜா அவர்கள் பிரதமர்பதவிக்குத் திரு. டட்லி சேனநாயக அவர்கள் தெரியப்பெற்றதோடு பாராளுமன்றத்திலே அரசாங்கக்கட்சியுடன் சேர்ந்துகொள்ள மனங்கொண்டுள்ளாரெனத் தெரியவருகிறது. இவர் சென்ற 26-ந்திகதி பாதுகாப்பு-வெளிநாட்டு மந்திரியாரின் பாராளுமன்றக் காரியதரிசியான திரு. ஆர். ஜி. சேனநாயக அவர்களுக்கு அனுப்பிய ஓர்தந்தியிலே, அரசாங்கக்கட்சியுடன்சேர்ந்து புதியபிரதமரான திரு. டட்லி சேனநாயக அவர்களை ஆதரிப்பதற்குத் தமக்குள்ளவிருப்பைத் தெரிவித்திருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தியவேத
பாதுகாவலன்
1952-ம் ஆண்டு
சித்திரைமாதம் 17-ந் திகதி

## உத்தானமாயினார்

பரிசுத்தவாரத்திலே நம்திருமீட்பரின் வியாகுலம்நிறைந்த திருப்பாடுகளைத் தியானித்தோம். அவரது இரக்கப்பெருக்கத்தையும், அன்பின் விசாலத்தையும் உணர்ந்து மனமுருகினோம். ஆனால், இந்த உத்தானவாரத்திலே அவரது மகிமைப்பிரதாபத்தையும், தெய்வீகவல்லமையையும் சிந்தித்து அகமகிழ்கின்றோம். ஞானஸ்நானம்பெற்றபொழுதே விசுவாசம்என்னும் மதித்தற்கரிய பரலோககொடையைப் பெற்றுக்கொண்டநாம் அவர் மரித்தவர்களிடையினின்று ஒட்டோலகராய் உத்தானமானார் என்பதைச் சந்தேகமற ஒப்புக்கொள்கின்றோம். நமது விசுவாசத்துக்கு அத்திவாரமும், ஆதாரமுமானது அவரின் திருஉத்தானமேயாகும். கிறீஸ்துநாதர் உத்தானமாகாவிட்டால் நமது விசுவாசம் வியர்த்தமும், விழலுமானதென்று அர்ச். சின்னப்பர் கூறுகின்றார். அதனால் நாம் இந்த வேதசத்தியத்தை விசுவசித்து, அதையிட்டுப் பெருமையடைகின்றோம். திருச்சபையுடன்சேர்ந்து “இது கர்த்தரின் நாள்; நாமெல்லோரும் இந்த நாளிலே ஆனந்தசந்தோஷம் கொள்ளுவோமாக” என்று சொல்லி அகமகிழ்கின்றோம்.

யேசுக்கிறீஸ்துநாதரின் திருஉத்தானத்துக்குக் கண்கண்ட சாட்சிகள் அவருடைய சீஷர்களும், அப்போஸ்தலர்களுமே. அவர்கள்இதை ஒளிப்புமறைப்பின்றியே ஒருமுறைக்குப்பலமுறை பிரசித்தமாகச் சனக்கூட்டங்களுக்கும், ரோமை அதிகாரிகளுக்கும், யூதகுரவர்கள் ஆசாரியர்களுக்கும் நன்கு அறிக்கையிட்டிருக்கின்றார்கள். அவர்கள் எவர்களுக்குமே அஞ்சாதவராய் அவரது உத்தானத்தைப் பிரசங்கித்து, அதற்காகத் தங்கள் உயிரையும் தியாகஞ்செய்தார்கள். கிறீஸ்துநாதர் உத்தானமானபின் தம்மை அவர்களுக்குக் காண்பித்தபொழுது அவர்களும் உடனே அதை நம்பினவர்கள்அல்ல. “நான் பூதமுமல்ல; அரூபியுமல்ல; எனது கை கால்களை, அவயவங்களைத் தொட்டுப்பாருங்கள்”. என்று ஆண்டவர்சொல்ல, அவர்களும் சோதனைசெய்து கருமத்தை நன்கு அறிந்தபின்னரே விசுவசித்தவர்கள். “நான் அவருடையகரங்களிலே ஆணிகள் அறைந்த துவாரத்தையுங் கண்டு, ஆணிகள்இருந்த இடங்களிலே என் விரலையும்விட்டு, அவருடைய விலாவில் என் கையையும் இட்டாலொழிய நான் விசுவசிக்கமாட்டேன்” என்று தொம்மைஅப்போஸ்தலர் சொல்லியிருக்கிறார். கிறீஸ்துநாதரும் அவருக்குத்தம்மைக் காண்பித்து, “இங்கே உன் விரலை இடு; என்கரங்களைப்பார்; உன்கையைநீட்டி என் விலாவிலேவை; அவிசுவாசியாய் இராமல் விசுவாசியாய் இரு” என்று திருவுளம்பற்றுகின்றார். தோமையார் மறுமொழியாக, “என ஆண்டவரே! என்தேவனே” என்று அறிக்கையிட்டு ஆண்டவரின் திருஉத்தானத்தில் விசுவாசம்கொள்ளுகின்றார்.

கிறீஸ்துநாதருக்கும், அப்போஸ்தலர்களுக்கும் பரம சத்துருவாயிருந்த சவுல்என்பவர் மனந்திரும்பிப் பவுல்எனும் நாமந்தாங்கி அவர் உத்தானமானார்எனும் சத்தியத்தை விசுவசிக்கின்றார். அம்மட்டா! அதனை எல்லாருக்கும்போதித்துத் தாமும் உத்தானமான யேசுநாதரைக் கண்ணாரக் கண்டதாகத் தெரிவித்திருக்கின்றார். சத்துருவான ஒருவர்—நவீன பதிதம்என நமது திருவேதத்தை ஏளனஞ்செய்த யூதருக்கு ஓர் தளகர்த்தன்போல இருந்தஒருவர் அவர் உத்தானமானாரென்று சொல்லும்பொழுது, அவிசுவாசத்துக்கே இடமில்லையன்றோ! கிறீஸ்துநாதரின் உத்தானமானது நமக்குப்படிப்பிக்கும் உசிதபாடமென்ன? அவர் மரணத்தில் நின்று உயிர்த்ததுபோல நாமும் பாவமரணத்திலிருந்து பிரசாதசீவியத்திற்கு உயிர்த்தவர்களாகவேண்டும்; அவர் உயிர்த்தபின் மீண்டும் மரியாதிருந்ததுபோலப் பிரசாதசீவியத்திற்கு உயிர்த்தநாமும் எப்போதும் தேவவரப்பிரசாதத்தில் நிலைபெறவேண்டும் என்பதே.

## பொதுத்தேர்தல் வந்தது

இலங்கைப் பாராளுமன்றம் இவ்வாண்டிலே கலைக்கப்படும் என்பது எல்லவரும்எதிர்பார்த்ததே. ஆனால், இம்மாசத்திலே அதுகலைக்கப்படுமென்பது நாம் எதிர்பாராததே. என்றாலும் அது நாம் எதிர்பாராதவிதமாகச் சென்ற 8-ந் திகதி செவ்வாயன்று கலைக்கப்பட்டதையிட்டு நாம் எதிர்பேச இடம்யாதும் இல்லை. பாராளுமன்றம் கலைக்கப்பட்டபோதே அதனிடமாக வரப்போகும் புதியபாராளுமன்றப் பிரதிநிதிகளாகவர முற்படும் அபேட்சகர்கள் தங்கள் நியமன பத்திரங்களைச் சமர்ப்பிக்கவேண்டியதினம் இம்மாதம் 28-ந்திகதி திங்கட்கிழமையாகும். அன்று பகல் 12மணிக்கும் 1மணிக்குமிடையே அபேட்சகர்கள் யாவரும் நியமனபத்திரங்களைச் சமர்ப்பித்து விடவேண்டும். பின்னர் அடுத்த வைகாசிமாதம் 26-ந்திகதி திங்களன்றும், 29-ந் திகதி வியாழனன்றும் பொதுத்தேர்தல் நடைபெறும்போல் இருக்கிறது. அது முடிந்தபின் புதியபாராளுமன்றத்தின் முதற்கூட்டம் ஆனிமாதம் 10-ந்திகதி நடந்தேறவிருக்கிறது.

பாராளுமன்றத்தைக் கலைக்குமாறு கவர்னர்-ஜெனரலுக்கு ஆலோசனைகூறிய பிரதமர் டட்லி சேனநாயகஅவர்கள் பத்திரிகைகளுக்கு விடுத்த செய்தியை இன்றைய நமதுவெளியீட்டின் மற்றோரிடத்தில் காணலாம். பாராளுமன்றத்திலுள்ள பெரும்பான்மையினரான அங்கத்தவர்களிடமிருந்து ஒத்துழைப்பு வாக்குறுதியையும், நாட்டிலுள்ளமக்களின் நல்லாசியையும், மனஆதரவையும் தாம் பெற்றுக்கொண்ட போதிலும் கூடியவிரைவிலே மக்களின் தீர்ப்பைப் பெற்றுக்கொள்ள வேண்டியது தம்முடைய கடமையாகுமென்று தாம்உணர்வதாக அவர் தமதுசெய்தியில் தெரிவித்திருக்கின்றார். தேசப்பிதாஎன்றும், இலங்கையின் சுதந்திரசிற்பியென்றும், பெருந்தலைவரென்றும், சமய - சாகிய பேதம்பாராது சகலமக்களையும் தமது உடன்பிறவிகளாகப் பாவித்து, அவர்களின் சுபீட்சத்தையும், நல்வாழ்வையுமே ஆசித்து, அத்துணைபெருந் தியாகசேவை ஆற்றிவந்த பெரியாரென்றும் புகழ்பெற்ற மாஜி பிரதமர் டி. எஸ். சேனநாயக அவர்களின் எதிர்பாராத மறைவையிட்டு எவர்தான் கவலையில் மூழ்கவில்லை. எவர்தான் அனுதாபம் தெரிவிக்கவில்லை. அவரின் மகத்தான சேவையை எவர்தான்பாராட்டவில்லை. உலகில் அவர் ஈட்டியிருந்த பெருமதிப்பைக் கவனித்து எவர்தான் பெருமையடையவில்லை. ஆனால், அவர் இறந்தும் இறவாதவர்போல் அவர் புதல்வர் திரு. டட்லி சேனநாயக அவர்கள் மக்களின் விருப்பிற்கிசைந்து—அவர்களின் விடாப்பிடியான கேள்விக்கிசைந்து பிரதமராக வந்திருக்கின்றார். அதனால்புதிய பொதுத்தேர்தல் நடைபெறவிருக்கும் இந்த வேளையிலே அவர் பெரும்பான்மையான மக்களின் ஆதரவையும், அனுதாபத்தையும் பெற்றுவருவதைக் கவனிக்கும்போது, தேர்தலில் அரசாங்ககட்சியின் கையே ஓங்குமென நிச்சயமாகக் காத்திருக்கலாம். யாழ்ப்பாணத்திலே தமிழ்க்காங்கிரஸ்கட்சி அபேட்சகர்களும், திரிகோணமலையிலே தமிழரசுக்கட்சியைச் சார்ந்துநின்ற திரு. எஸ். சிவபாலன் அவர்களும், இதுவரை சுயேச்சை அங்கத்தவர்களாயிருந்த திரு. கே. வி. நடராஜா, திரு. வி. நல்லையா, திரு. எஸ். யு. எதிர்மன்னசிங்கம் என்பவர்களும், முஸ்லீம் அபேட்சகர்கள் சகலரும் அரசாங்ககட்சியிற் சேர்ந்து தேர்தலுக்கு நிற்பதும் அக்கட்சியின்கையே ஓங்கிநிற்கின்றதென்பதைக் காட்டாமற்காட்டுவதாகிய நல்ல சான்றுகளாகும்.

மாஜிபிரதமரிற்கொண்ட அனுதாபமும், அபிமானமும், அன்பும் மக்களின்உள்ளங்களைவிட்டு இன்னும்அகலாதிருக்கும் இச்சந்தர்ப்பத்திலே புதிய பிரதமருக்கும், அவரைத் தலைவராகக்கொண்ட அரசாங்ககட்சிக்கும் மிகுந்தஆதரவு கிடைக்குமென்பதை வாக்காளர்கள் சகலரும் நன்கு உணர்ந்திருக்கிறார்கள் என்பது சகலரும்அறிந்த இரகசியம். ஆதலால் மாஜிபிரதமர் அவர்கள் சுபீட்சமாக வாழும் ஓர் நவலங்காவை—சம்பூரணமான சனநாயகவாழ்வு தழைத்தோங்கும் ஓர் நவலங்காவைச் சிருட்டிக்கும் விஷயமாய்த்தொடக்கிப் புகழ்ச்சிக்குரியவிதமாக நடாத்திவந்த தேசப்பணியைத் தொடர்ந்து நடாத்த அவர்புதல்வரே அதிகந்தகுதிவாய்ந்தவரென்று கருதப்பெற்று அவரேபிரதமராக நியமனம பெற்றிருக்கும்போது அவரையும், அவர்கட்சியையும் மக்கள்சிறப்பாக ஆதரிப்பார்கள் அன்றோ !

### அர்ச். பிரான்சீஸ்துவின்
## மூன்றாஞ்சபை

அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றாஞ்சபை மாதாந்தகூட்டம் இம்மாதம் 25-ந் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு அர்ச். சூசையப்பர் சிற்றாலயத்தில் நடந்தேறும். கூட்டத்துக்கு முன் 4-45 மணிக்கு ஆலோசனைச்சங்கம்இருக்கும். ஆகையால் ஆலோசனைச் சங்கத்தின் அங்கத்தவர்கள் நேரகாலத்தோடு வரும்படி தயவாய்க் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். வைகாசி மாதம் பரிபூரணபலன்கள் அடையக்கூடிய நாட்களாவன:— 17, 18, 19, 20, 21, 22, 30, 31(2). 31-ந் திகதி பொதுப்பாவமன்னிப்பு அடையலாம்.

A. S. FRANCIS OF MARY
for Director

### கர்த்தர் உத்தானத்தின்பின்
## 1-ம் ஞாயிறு
(தவளோற்சவ ஞாயிறு)

### சுவிசேஷ வாசிப்பு
(அரு. 20 : 19—31)

அக்காலத்தில் வாரத்தின் முதல்நாளாகிய அன்றையதினம் சாயங்காலமாகி, சீஷர்கள்கூடியிருந்த வீட்டின்கதவுகள் யூதர் பயத்தின்நிமித்தம் சாத்தப்பட்டிருக்கிறபோது யேசுநாதர் வந்து நடுவிலேநின்று: உங்களுக்குச் சமாதானம் உண்டாகுக! என்று அவர்களுக்குச் சொன்னார். அன்றியும் அவர் இதை வசனித்தபின்பு தம்முடையகரங்களையும் விலாவையும் அவர்களுக்குக் காண்பித்தார். ஆதலால், சீஷர்கள் ஆண்டவரைக் கண்டதைப்பற்றிச் சந்தோஷப்பட்டார்கள். அவர் மறுபடியும் அவர்களைப் பார்த்து: உங்களுக்குச்சமாதானம் உண்டாகுக! பிதாஎன்னை அனுப்பினதுபோல் நானும் உங்களை அனுப்புகிறேன் என்றார். அவர் இவைகளைச் சொன்னபின்பு அவர்களின்மேல் ஊதி அவர்களுக்குத் திருவுளம்பற்றினதாவது: இஸ்பிரீத்துசாந்துவானவரைப் பெற்றுக்கொள்ளுங்கள். எவர்களுடையபாவங்களை மன்னிப்பீர்களோ அவர்களுக்கு அவைகள் மன்னிக்கப் பட்டிருக்கின்றன; எவர்களுடைய பாவங்களை மன்னியாதிருப்பீர்களோ அவைகள் மன்னிக்கப்படாதிருக்கின்றன என்றார். பன்னிருவரில்ஒருவராகிய திதீம்என்னப்படுகிற தோமையாரோவெனில் யேசுநாதர்வந்தபோது அவர்களோடிருக்கவில்லை. ஆகையால், மற்றச்சீஷர்கள்: ஆண்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரைக் கண்டோம் என்று அவரிடஞ்சொன்னபோது, அவர்: நான் அவருடைய கரங்களில் ஆணிகளின் துவாரத்தைக் கண்டு, ஆணிகளின் இடத்தில் என்விரலைவிட்டு, அவருடைய விலாவில் என்கரத்தை விட்டாலொழிய விசுவசியேன் என்று சொன்னார். எட்டு நாளைக்குப் பின்பு அவருடையசீஷர்கள்மறுபடியும் உள்ளே இருந்தார்கள். அவர்களோடு தோமையாரும் இருந்தார். கதவுகள்சாத்தப் பட்டிருக்கையில் யேசுநாதர் வந்து நடுவிலே நின்று: உங்களுக்குச்சமாதானம உண்டாகுக! என்றார். பின்னும் தோமையாரைநோக்கி: இங்கேஉன் விரலைஇடு, என்கரங்களைப்பார், உன்கரத்தையும் நீட்டி என விலாவிலேவை; இனி, அவிசுவாசியாயிராமல் விசுவாசியாயிரு என்று திருவுளம்பற்றினர். தோமையார் மறுமொழியாக: என் ஆண்டவரே! என் தேவனே! என்க; தோமையே, நீ என்னைக்கண்டதினுல் விசுவசித்தாய்; காணுதிருந்தும் விசுவசித்தவர்கள் பாக்கியவான்கள் என்று யேசுநாதர் அவரிடம் கூறினர். இப்புத்தகத்தில் எழுதப்படாத வேறு அநேக அற்புதங்களையும் மெய்யாகவேயேசுநாதர் தம்முடைய சீஷர்கள்முன்பாகச்செய்தருளினர். ஆனல், யேசுநாதர் சர்வேசுரனுடைய சுதனுகிய கிறீஸ்துவாயிருக்கிறார் என்று நீங்கள்விசுவசிக்கும்படியாகவும், விசுவசித்து அவருடையநாமத்தால் நித்தியசீவியத்தை அடையும்படியாகவும் இவைகள் எழுதப்பட்டிருக்கின்றன.

## வழிகாட்டுகின்றார்

சென்னை மாகாணத்திலே இப்பொழுது ஏற்பட்டுள்ள நெருக்கடியான நிலைமையில் ஸ்ரீ இராஜகோபாலாசாரி அவர்களைப்போலும் சிறந்த இராஜதந்திரியின்சேவை அவசியம். ஆகவே, அவர் சென்னைச்சட்டசபைக் காங்கிரஸ்கட்சியின் தலைமைப்பதவியை ஏற்குமாறு கோருவதாகச் சென்ற 29-3-52 சனிவாரம் சென்னைச் சட்டசபைக் காங்கிரஸ்கட்சிக் கூட்டத்தில் ஏகமனதாக ஒரு தீர்மானம் நிறைவேறியது. அவரும் பதவியை ஏற்றுக்கொண்டார். சென்னைக் கவர்னர் அவர்கள் ஸ்ரீ இராஜகோபாலாசாரி அவர்களைச் சென்னை மேல்சபைக்கு அங்கத்தவராக நியமித்துள்ளார். அவரும் சித்திரை 1-ந் தேதியன்று சட்டசபைக் காங்கிரஸ்கட்சிக்கூட்டத்திற்கு விஜயம்செய்து ஒருநீண்ட பிரசங்கம் செய்தார். அதன் மிகமுக்கிய பகுதிகளை ஈண்டுதருகிறோம்.

"நமது மக்கள் அறிவுள்ளவர்கள். நாம் இந்தஅறிவை நன்கு பயன்படுத்திக் கொள்வோமாக. ஒருகாரியம் செய்யுமுன் நாம் நன்றாக யோசிப்போமாக. தீரத்துடன் காரியங்களைச்செய்வோம். நாம் ஒத்துழைத்து ஒருவருக்கொருவர் உதவியாயிருப்போம். இப்படிச்செய்தால் நமக்கு ஒத்துழைப்பு கிடைக்கும்.

"இதற்குக் கடவுளின் தயவும் வேண்டும். இல்லையேல கிட்டாது. தன்னுடைய வளர்ச்சிக்குத் தோட்டக்காரனும் காரணம் என்பதை மறக்கும் செடிகளைப்போல, இரத்த வோட்டமும், தேகவலிமையுமுள்ள வாலிபர்கள் கடவுள் இல்லையென்று கூறலாம். தங்கள் சொந்தச் சாமர்த்தியத்தாலும், அறிவாலுந்தான் தாங்கள் வாழ்ந்துவருவதாக இந்தவாலிபர்கள் நினைக்கலாம். இவையத்தனையும் மாயையான எண்ணங்கள். சர்வவல்லமைபொருந்திய கடவுளால்தான் சகலமும் ஏற்படுகிறது. அதன்படி காரியங்கள்நடக்கின்றன.

"இவ்வகைப்படி பார்க்கும்போது, நான் உங்களுக்குத் தலைமை வகிக்கவேண்டுமெனில், நீங்கள் எல்லோரும் கடவுள் நம்முடனேயே எங்கும் இருக்கிறார் என்பதை ஏகமனதாக ஏற்றுக்கொள்ளவேண்டும். நான் கூறிய வார்த்தையை நன்றாகக்கவனியுங்கள். 'கடவுள் இருக்கிறார்' என் [illegible] உபயோகிக்கவில்லை. கடவுள் நம்முடன் இருப்பதை (கடவுள் சன்னிதானத்தை) உணரவேண்டும்என்ற சொற்றொடரை நான் உபயோகித்தேன். நீங்கள் என்னசெய்தாலும் இதை மற்றமனிதர்களிடமிருந்து நீங்கள் மறைத்துவிடலாம். ஆனல், கடவுள் பார்க்கிறார். நீங்கள் அழிவீர்கள். இது நேரிடக் கொஞ்சக்காலம் பிடிக்கலாம். ஆனல், உங்களையே உங்கள் மனச்சாட்சிவதைக்கும். உங்கள் நண்பர்களிடையிலும் மதிப்பை இழப்பீர்கள்.

"கடவுள் நம்முடனேயே இருக்கிறார் என்பதில் உங்களுக்கு நம்பிக்கைவேண்டும். பயந்துகொண்டல்ல. அவர்மீது அன்புடன் இந்தநம்பிக்கை உங்களுக்குவேண்டும். கடவுளை உங்கள் தாய்போலக் கருதுங்கள். அந்தத்தாயார் எப்பொழுதும் உங்களுடனே இருப்பது போலப் பாவித்து அதற்கேற்ப நடந்துகொள்ளுங்கள். இப்படி நடந்தால் யாவும் சரியாகிவிடும்."

## திரிதினத்தில் உயிர்த்தானைச் சேவிப்போமே

விருத்தம்

[1]

வல்லபிதாச் சித்தமுடன் மகிமை வாய்ந்த
மாதாவின் மணியுதரம் வந்தே மண்ணில்
வெல்லைமலை யோரமதிற் பிறந்து ஞான
வெளிச்சத்தில் மக்கள்பவ விலங்க றுத்துச்
சொல்லரிய வேதனைகள் மிகவும் பட்டுச்
சுமந்தெடுத்த சிலுவைதனி லாவி நீத்த
எல்லையிலாத் தேவசுதன் உயிர்த் தெழுந்தார்!
எங்களுளம் வாக்கார ஏத்து வோமே!

[2]

பண்ணிறைந்த மொழியொன்றால் உலகம் மூன்றும்
படைத்தளித்த தேவனிந்தப் பாவிக் காக
எண்ணிறந்த துன்பதுயர் பட்டுத் தூய
இரட்சணிய பாதைதனில் எமையே சேர்த்தார்
கண்ணிறைந்த வான்சுடர்காள்! கானப் புட்காள்!
கருதுமுயர் மாமுகில்காள்! வாழ்த்தும்! வாழ்த்தும்!
புண்ணிறைந்த மனத்தோடு வாழும் நீசப்
புழுவான நம்துதிகள் போதுமோ தான்!

[3]

உத்தானம் ஒன்றிலதேல் வேத மில்லை;
உண்மையில்லை; திருச்சபையும் உறுதி யில்லை;
கத்தாதி கத்தன்திருக் காட்சி யெல்லாம்
கனவுமல்ல; கற்பித்த கதையு மல்ல
சித்தமதில் நம்பாத தோமையார் "என்
தேவனே!" யெனமொழிந்த சேதி பொய்யோ?
நித்தியமாம் பேரின்ப வாழ்வை ஈயும்
நிர்மலனை நிதம்வாழ்த்தும்! வாழ்த்தும்! நீரே.

[4]

கொடியபல யூதரெலாங் கூடித் தேவ
குமாரனென மதியாமற் கூற வொண்ணு
அடியுடனே முண்முடியும் மூங்கில் தண்டும்
அருஞ்சிலுவை யிருப்பாணி அளித்துஞ் செய்த
நெடியபல கொடுமைகளும் நினைக்கும் போதே
நெஞ்சொடிந்து போனுலும் நேச மோட்ச
முடியுடனே யேசுவெழுந் தருளு காட்சி
மூவுலகுந் தொழுதேத்தும்! ஏத்து மன்றோ!

[5]

பந்தந்தோய் யூதர்கொலை செய்து மந்தப்
பரனிருந்த கல்லறைக்குப் பதிக்க முத்ரை
தந்தந்தோ! வைத்தனரே! யிறந்த பின்புஞ்
சதிசெய்வார் மதியெண்ணத் தகுவ தொன்றோ!
குந்தம்வாள் ஈட்டியுடன் காவல் செய்த
கொடியோருங் காத்திருக்கக் குமாரன் யேசு
அந்தந்தோ! உயர்த்தெழுந்தார்! நாமும் எங்கள்
ஆன்மஉயிர் கொண்டெழுந்தே அஞ்சல் செய்வாம்!

—ஞானி

## சிந்தாமணியும் ...
## ... தேம்பாவணியும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இங்ஙனமே, ஏமாங்கத நாட்டில், இராசமாபுரத்தில், குருகுலத்துவந்த 'சச்சந்தன்' என்பவனுக்கும், அவனது மனையாளான 'விசயை' என்பவளுக்கும் பிறந்தபுதல்வனுகிய குழந்தைக்கும், அக்குழந்தை பிறந்த இடமாகிய மயானத்தின் கண்ணே 'ஜீவ' என ஓர் தெய்வத்தால் வாழ்த்துப்பெயரிடலாயிற்றெனவும், அக்குழந்தையே 'சிந்தாமணி'யின் கதாநாயகனுகிய 'சீவகன்' என்பானெனவுங் கூறுப.

சீவகன் பிறந்தவுடனே தாயாகிய 'விசயை' என்பவள் குழந்தையைத் தன் மடியிலிட்டு நோக்கி, 'சிந்தாமணி' யே எனத் தாலாட்டிப் பாராட்டினளாம். அதுபற்றி, அவனது வரலாற்றைக் கூறும்நூலானது 'சிந்தாமணி' யென வழங்குவதாயிற் றென்பாருமுளர்.

சிந்தாமணியிற் கூறப்பெறும் சீவகனென்பான் அரசமரபினனாற்போன்றே, தேம்பாவணியிற்கூறப்பெறும் சூசைமாமுனிவர், கன்னிமரியம்மையாரவர்களும் அக்காலத்து யூத குல அரசபரம்பரையினராவர். சிந்தாமணியின் நூலாசிரியரைத் 'திருத்தக்கதேவர்' என்பர். இவர் ஓர் சமணமுனிவர். இவரைத் திருத்தகுமுனிவர், திருத்தகு மஹாமுனிகள், திருத்தக்க மஹாமுனிகள், தேவர் என்னும் பெயர்களாலும் வழங்குவர்.

'திருத்தக்கதேவர்' என்பதில், 'தேவர்' என்பது பெரும்பாலும் சமணமுனிவர்கட்கு இட்டுவழங்கும் மரபென்ப! 'சிந்தாமணி'யின் உரையாசிரியராகிய நச்சினர்க்கினியரென்பவர், திருத்தக்கதேவரைச் சுட்டி, "சோழர் குலமாகிய கடலிற் பிறந்த வலம்புரி" எனப் போற்றிப் பாராட்டியுள்ளார்.

'தேம்பாவணி'யின் நூலாசிரியரைப் பெஸ்கிஎனவும், வீரமாமுனிவர் எனவும், தைரியநாதசுவாமிஎனவு மழைப்பர். இவர் ஓர் கத்தோலிக்க கிறீஸ்தவ குருப்பிரசாதியாவர். ஐரோப்பாக் கண்டத்தைச் சேர்ந்த இத்தாலி தேசத்திற் பிறந்து வளர்ந்தவர். குருத்துவத்தொண்டினைநாடிப் பாரதநாட்டினை யடைந்து, தெற்கின் கண்ணுள்ளனவாயதிரிசிரபுரம், காயற்பட்டினம், புதுவை என்பவற்றின் மேற்றிராசனங்களில் பன்னெடுங்காலமாய்த் தேவ திருப்பணியைச் செவ்வனே புரிந்தவர். ஆங்கிலம், லத்தீன், வடமொழி, தென்மொழி என்பவற்றோடுகூட, பாரதநாட்டன வாய பல்வேறுமொழிகளிலும் பாண்டித்தியமெய்தி நுண்மாண் நுழைபுலம்பெற்றவர். கற்றுவல்ல அக்காலப் புலவர் குழாத்தினுள் மஹா பிரசித்தி பெற்று விளங்கிய ஓர் வித்வசிரோமணி.

எனவே, ஒற்றுமைநயத்தால் சிந்தாமணியாசிரியராகிய, 'திருத்தக்கதேவ'ரைப் போன்றே, தேம்பாவணியாசிரியராகிய இவரும் முற்றத்துறந்தவோர் துறவியாவர். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களின் தீர்ப்பைப் பெறப் பிரதமர் கோருகிறார்

எனது தந்தையார் காலமானதும் புதியமந்திரிசபையை அமைக்கும்படி கவர்னர்-ஜெனறலால் விடுக்கப்பட்ட அழைப்பை நான்ஏற்று ஒருவாரகாலமே கடந்துள்ளது. பாராளுமன்றத்திலுள்ள எனதுசகாக்களும், நாட்டிலுள்ள சகலவகுப்புகளின் பிரதிநிதிகளும் என்னுடன் ஒத்துழைப்பதாக எனக்கு அளித்த வாக்குறுதியே நான்இக்கடமையை மேற்கொள்ள எனக்குப் பலமளித்தது. இவ்வாறு எனக்குஅளித்த வாக்குறுதிக்காகவும், ஒத்துழைப்பிற்காகவும் நாடெங்குமுள்ள எனதுசகோதரபிரசைகளுக்கு நான் எனதுமனப் பூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

காலஞ்சென்ற எனது தந்தையார் சிறப்பாகஏற்று நடத்திவந்த முக்கிய பொறுப்புகளை நான் ஏற்றுநடத்த முன்வந்தபோது நாட்டுக்குவிடுத்துள்ள எனதுசெய்தியிலே, நாம்அவ்வழியில் செல்லவேண்டுமென்று அவர்விரும்பினாரோ அவ்வழியிற்செல்ல நான் உறுதிசெய்துள்ளேனென்று தெரிவித்திருந்தேன். சுதந்திரம்எய்துவதற்காக எனதுதந்தையார் தமது சகலசக்திகளையும் பிரயோகித்துவந்ததை நீங்கள் நன்குஅறிவீர்கள்.

அவர்மரணமானபோது நாட்டுமக்கள் ஏகோபித்துக்கொண்டாடிய துக்கத்தையும், காட்டிய அனுதாபத்தையும், செலுத்தியமரியாதையையும், தெரிவித்த பாராட்டுதல்களையும் நான்கவனித்தபோது, எனதுதந்தையார் நான் குறிப்பிட்ட இலட்சியங்களின் சின்னமாகமட்டுமன்றி, அந்தஇலட்சியங்களை அடிப்படையாகக்கொண்டு அவர் சிருஷ்டிக்கவிரும்பிய நவலங்காவுக்கே சின்னமாகவும் விளங்குகிறாரென்பதை நான்தெளிவாக உணரலானேன். மக்கள் பசி, பிணி, அறியாமை ஆகியவற்றுலூழலாது சுபீட்சமாகவாழும் நவலங்காவை— சம்பூரணமான சனநாயகவாழ்வு தழைத்தோங்கும் நவலங்காவை அவர் சிருஷ்டிக்கவிரும்பினர். அப்படிப்பட்ட நவலங்கா சுதந்திரமும், சுபீட்சமுமுள்ள உலகநாடுகளில் ஒன்றாக மீண்டும் திகழவேண்டுமென்று அவர் விரும்பினர்.

கடந்தசிலதினங்களாக நான் இலங்கைமக்களுக்கு ஆற்றவேண்டிய கடமையைக்குறித்து ஆழ்ந்துசிந்தித்தேன். எனதுதந்தையார் எந்தஇலட்சியங்களை அடைவதற்காக உழைத்தாரோ அந்தஇலட்சியங்களில் ஒருசிலவே பூர்த்தியாகியிருக்கின்றனவென்பதை நான் உணரலானேன். இந்த ஒருசில இலட்சியங்களை அடைவதற்காக அவர்தொண்டாற்றிவருகையில் அவர் தம் முயிரைத் தத்தஞ்செய்தார். அவரதுமறைவால் தடைப்பட்ட அவ்வேலைகளை மேற்கொண்டுநடத்தும்படி நான்அழைக்கப்பட்டுள்ளேன். இக்கடமைகளை ஆற்றுவதற்கு நான்இறுதியாகத் தெரிந்தெடுக்கப்பட வேண்டுமோனுல், அது சம்பந்தமாக மக்கள் இலங்கைச்சரித்திரத்தின் இம்முக்கியமானபகுதியில் தங்கள்சொந்தவிருப்பை வெளிப்படுத்த அவர்களுக்கு ஒருசந்தர்ப்பம் அளிக்கப்படவேண்டுமென நான் உணர்கிறேன். அவர்கள்சார்பாக நாட்டினை ஆள்வோரை வாக்குச்சீட்டுகள்மூலமாகத் தெரிந்தெடுக்கும் தங்கள் உரிமையைப் பிரயோகிப்பதன்மூலம் அவர்களுக்கு அவ்விதசந்தர்ப்பத்தை அளிக்க நான் விரும்புகிறேன்.

இவ்வருடமுடிவுக்குமுன் பாராளுமன்றம் கலைக்கப்பட வேண்டியதில்லை என்பதை நீங்கள்யாவரும் அறிவீர்கள். பாராளுமன்றத்தின் பெரும்பாலான அங்கத்தினர்கள் என்னுடன்ஒத்துழைப்பதாக எனக்கு வாக்குறுதி அளித்துள்ளபோதிலும், நாட்டுமக்களின்நல்லாசி எனக்குக் கிடைத்திருந்தபோதிலும், கூடியவிரைவில் மக்களின்தீர்ப்பைப் பெற்றுக்கொள்ளவேண்டியது எனது கடமையாகுமென்று நான் உணர்கிறேன். ஆதலால், பாராளுமன்றத்தைக் கலைத்துவிட்டுப் புதியபாராளுமன்றத்தைத் தெரிந்தெடுப்பதற்காக நடைபெறும் பொதுத்தேர்தலுக்குநிற்கும் அபேட்சகர்கள் நியமனப்பத்திரங்களைச் சமர்ப்பிக்கும்திகதியை நிர்ணயித்துக்குறிப்பிடும்படி நான் கவர்னர்-ஜெனறலுக்கு ஆலோசனைகூறினேன். மக்களின் முதலாவதுதொண்டனுக நான் கடமையாற்ற வேண்டுமென்பது உங்கள்விருப்பமானுல் அந்தவிருப்பத்தை நான் நிறைவேற்றிவைப்பேன்என்று உறுதிசெய்கிறேன். இதேகடமை எனது தந்தையார்மீது சுமத்தப்பட்டபோது மக்களின்நம்பிக்கைக்குப் பாத்திரமாக அவர் அக்கடமையை எவ்வாறுசெய்தாரோ அதேபோன்று என்னுலியன்றவரை அக்கடமையைச் செய்வேன்என்றும் உறுதிசெய்கிறேன்.

## இடதுசாரியைத்தெரிவுசெய்தால்

"இந்தத்தொகுதியிலுள்ள மக்களின்நன்மைக்காகக் கடந்தநான்குவருடங்களிலும் யாதொன்றுமே செய்யப்படவில்லை; ஏனெனில், பாராளுமன்றத்திலே உங்கள்பிரதிநிதியாக இடதுசாரிஒருவரைத் தெரிவுசெய்வதாகிய தவறை நீங்கள்செய்தீர்கள்; அந்தத் தவறைத் திரும்பவும் செய்யாதிருக்கும்படி உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்"என்று அக்குறெசா இடைத்தேர்தலிலே ஐக்கியதேசியக்கட்சி அபேட்சகரைஆதரித்து மதுகமுவாவில் நடைபெற்ற பிரசாரகூட்டம் ஒன்றில் வெலிகாமம்பிரதிநிதியும், தொழில்-சமூகசேவை மந்திரியாரின் பாராளுமன்றகாரியதரிசியுமான மேஜர் மொண்டகு ஜயவிக்கிரம அவர்கள் வாக்காளருக்கு நன்மதிகூறலாயினர். மேலும் அவர்பேசியபோது, "பாராளுமன்றத்திலுள்ள இடதுசாரி அங்கத்தவர்கள் மக்களின் க்ஷேமத்தையும், நல்வாழ்வையும் பாதித்துள்ள கருமங்களிற்தானும் அரசாங்கத்துடன்ஒத்துழைக்கவிரும்பவில்லை. தங்கள்தொகுதிகளின்தேவைகளை அவற்றுடன்சம்பந்தப்பட்ட மந்திரிமார்களுக்கு எடுத்துக்காட்டக் கவனமெடுக்கவில்லை; அதனுல். அவர்களின் தொகுதிகளிலுள்ள மக்கள் கஷ்டமுற்றிருக்கிறார்கள்; அக்குறெசாஸ்தானத்துக்கு நடைபெறும் தேர்தல் போட்டியானது தனிப்பட்டவர்களிடையே நடந்தேறும் ஓர் போராட்டமன்று; அதுசனநாயகஆட்சிமுறையை நாடிநிற்கும் ஐக்கியதேசியக்கட்சிக்கும், மக்களுக்குப புனிதமாயுள்ள சகலத்தையுமே அழித்துவிடுவதற்குக் கங்கணங்கட்டிநிற்கின்ற கம்யூனிஸத்துக்குமிடையே நடந்தேறும் ஓர் போராட்டமாகும்; றுகுணையைச்சேர்ந்த மக்கள் தங்கள்தாய்நாட்டை யதேச்சாதிகார அரசாங்கம்ஒன்றுக்குக் கையளிப்பதற்கு முயற்சியெடுக்கப் போகிறார்களோ?" என்றும் அவர் கூறினின்றார்.


## சம்பாதியுங்கள்

முதல் இல்லாமலே உங்கள் ஓய்வான நேரங்களில் மாதம் ஒன்றுக்கு 100 ரூபா முதல் 300 ரூபா வரையில் சம்பாதியுங்கள். விபரங்கள் இலவசமாக அனுப்பப்படும்.

Girson Knitting Works,
Ludhiana.


## உங்களுக்குத் தெரியுமா?

[1] உலகத்திலே கடலின்கீழும் எரிமலையாதும் இருக்கின்றதா?

ஆம், ஒரேயொருஎரிமலை இருக்கின்றது. இது பிலிப்பைன்ஸ்நாட்டிலே வடலூசன் தீவுக்கப்பால் டெடிக்காஸ் எனுமிடத்தில் இருக்கின்றது. இது கடந்தசிலவாரங்களாக எரிந்து கடலின் மேலாகப் பதினுயிரம்அடி உயரம் வரையில் புகையை எழுப்பிக்கொண்டிருக்கிறது. இதுசம்பந்தமாக ஆராய்ச்சிநடத்துதற்கென்று மனிலா நகரிலிருந்து விஞ்ஞானிகள் அங்கு சென்றிருக்கிறார்கள்.

[2] இலைக்கறியின் குணங்கள் எவை?

(a) முல்லையிலையை முறையாகத் தின்றுவரப்
பொல்லா க்ஷயரோகம் போம்.

(b) சூடு சொறிசிரங்கு துஷ்டப் பிரமேகம்
ஓடும் முசுட்டையினுலோர்.

(c) இருமலொடுநீரடைப்பை இல்லாமலோட்டும்
அருமையுளகொவ்வையிலையாம்.

(d) கண்புகைச்சலோடு கடுமூல நோய்தீரும் [பார்.
பண் பொன்னுங் காணியினுற்

(e) கண்ணோய் விஷநீர் கடுஞ்சூடு தீர்ந்திடவே
உண்ணுய் முருங்கையிலையூண்.

(f) வெல்லார் யமதூதர் மேலுங் கிராணிக்கு
வல்லாரையே நல்மருந்து.

(g) ஈளையிருமலிவை யெல்லாந் தூதுளையால்
வேளைக்ககன்றுவிடும்.

(h) அறிஞ்சாயோதீரும் அரையாப்புக்காசம்
குறிஞ்சா இலையின் குணம்.

(i) பாலையிலையாற் பறக்கும் பிரமேகம்
ஏலுமட்டு முண்பாயிதை.

(j) நாரிப்பிடிப்பு நடந்திடுமே சண்டியிலை
வாரிப்பிடித்துண்டு வாழ்!

(த. தொ)

[3] பின்வருவனவற்றின் சீவசத்துகளைப்பற்றி அறியக்கூடியதென்ன?

இரு தோடம்பழங்களிலுள்ள சீவசத்து ஒரு நெல்லிக்காயில் உண்டு.

ஒருதோடம்பழத்திலுள்ள சீவசத்து ஒருசிறிய கொய்யாப்பழத்தில் உண்டு

நெல்லிக்காயை வற்றலாகவைத்திருந்தாலும் அதிலுள்ளசீவசத்து அதிகம் குறைவதில்லை. ஆகையால் வருடமுழுவதிலும் நெல்லிக்காய்ப்பச்சடி பாவிக்கலாம்.

வேப்பிலைக்கொழுந்தில் ஏ-சீவசத்து ஏராளமாகவிருப்பதால் அதனைச்சாப்பிட்டுப்பழகுவது நன்று.

வெற்றிலையிலும் ஏராளமான ஏ-சீவசத்துஉண்டு. சீவற்பாக்கில் இரும்பு, கல்சியம் மிகச்சொற்பம். களிப்பாக்கில் இரும்பு, கல்சியம் அதிகம்.

[4] முதலாவது சர்வதேச சற்பிரசாதமகாநாடு எங்கே? எப்போது? நடைபெற்றது?

லில் நகரிலே 1831-ம் ஆண்டு.

[5] அயர்லாந்தை மனந்திருப்பும்படியாக அர்ச். பத்திரிசியாரை அங்கு அனுப்பிவைத்த பாப்பானவர் யார்?

அர்ச். முதலாவது செலஸ்ரீன்.

[6] பூமியானது சூரியனை ஓர்தரம் சுற்றிவர எவ்வளவுகாலம் செல்லுகின்றது?

365 நாள் 5 மணி 49 நிமிஷம் 12 செக்கன் செல்லுகின்றது.

[7] பரிசுத்த தைலங்கள் எந்தநாளிலே மந்திரிக்கப்படுகின்றன?

பெரியவியாழக்கிழமை மந்திரிக்கப்படுகின்றன.

## நானுசங்கதிகள்

— ஆஸ்திரேலிய அரசாங்கம் கன்பெரு தலைநகரிலுள்ள தனதுபாராளுமன்றகட்டடத்தில் நிறுவுதற்கென்று ஐந்தாவதுஜோர்ஜ் அரசரது பதினைந்து அடிஉயரமான வெண்கலச்சிலை ஒன்றை அங்கு லம்பெத் எனுமிடத்திலுள்ள வார்ப்புவேலைச் சாலையிலே வார்ப்பிக்கின்றது. இப்போது அந்தச் சிலையின் தலையில் வேலைநடைபெற்று வருகின்றது.

— இம்மாசம் ஆரம்பமாகியிருக்கும் யப்பானிய புதியஅரசிறைவருடத்திலே அது செலவுசெய்யத் திட்டமிட்டிருக்கும்பணம் 85,270 கோடி யென். இதிலே அமெரிக்கவரசுடன் இணைந்த பொதுப்பாதுகாப்புச் செலவுபணம் 6,500 கோடியென். தேசிய பாதுகாப்புச் செலவுபணம் 5,600 கோடியென்.

— கம்யூனிஸ்தகட்சி வேலைசெய்வதற்கென ஏற்படுஞ்செலவுநீங்கலாகப் பிறநாடுகளிலே கம்யூனிஸ்தபிரசாரம் நடத்துவதற்கெனச் சோவியற்அரசு வருடம்ஒன்றுக்கு 140 கோடி டலருக்குமேல் செலவுசெய்வதாக அமெரிக்க அரசாங்கபகுதி நிபுணரான திரு. மோஸ் ஹார்வே அவர்கள் அமெரிக்க பாராளுமன்றத்திலே தெரிவித்திருக்கின்றார்.

— பிரித்தானியஅரசு 'டாறிங்' எனும் நாமத்துடன் புதியதோர் டிஸ்திரோயர்க்கப்பலைக் கட்டியிருக்கின்றது. உலகில் சப்மறின்களைப் பரிநாசஞ்செய்வதில் மகாப்பெரும் அபாயம்விளைக்கக் கூடியதாய் இதைப்போலஒன்று எக்காலத்திலாவது கட்டப்படவில்லையென பிரித்தானியகடற்படை தெரிவிக்கின்றது. இதிலே 21 அங்குலநீளமான பத்து ரோர்பிடோ ரியூப்புகள் இருக்கின்றன.

— அமெரிக்க ஜனுதிபதித்தேர்தலிலே சனநாயககட்சி அபேட்சகராக முன்வந்துள்ள திரு. எஸ்ரெஸ் கெபோவர் அவர்களுக்குப் பொதுச்சன ஆதரவு அதிகமாகிக்கொண்டுவருகிறதாம். ஆனுல், ஜனுதிபதிட்றூமன் அக்கட்சியின்சார்பாகத் தெரிவுசெய்திருக்கும் திரு. அட்லாய் ஸரிவென்சன் என்பவரின் பக்கமாகவே சனநாயககட்சித்தலைவர்கள் திரும்பிக்கொண்டிருக்கின்றனராம். இவர் இல்லினேயிஸ்நாட்டின் தேசாதிபதியாவர்.

— ஜேர்மன் சேனையிலே முன்னர் ஓர் சேனுபதியாயிருந்த ஜெனறல் போல் ஹான்ஸ் தோய்சென் அவர்கள் சமீபத்திலே ஆச்சென்நகர் ஆசனக்கோவிலிலே அந்நகரின் வண்டர்வெல்டேன்மேற்றிராணியாரால் குருத்துவாபிஷேகம் செய்யப்பெற்றிருக்கின்றார். தற்போது 62 வயசுடையவரான இவர் யுத்தத்திலே தமது மனைவி மக்களை இழந்துபோயினர்.

— சென்னையிலே சமீபத்தில்நடந்தேறிய இந்தியஒலிம்பிக் பந்தையவிளையாட்டுகளில் பம்பாயைச்சேர்ந்த 23 வயசுடையவரான லேவி பின்ரோ எனும் கத்தோலிக்கவாலிபர் "ஆசியாவின் மகாதீவிர பந்தைய ஓட்டக்காரர்" எனப் பெயர்பெற்றிருக்கின்றார். ஹெல்சிங்கி நகரிலே சமீபத்தில் நடைபெறவிருக்கும் அகிலஉலக ஒலிம்பிக்பந்தையவிளையாட்டில் கலந்துகொள்ளுமாறு இந்தியாவின்சார்பாக இவர் தெரியப்பெற்றிருக்கின்றார்.

— யப்பானிலே மிகப்பெரிய. கத்தோலிக்க ஆலயம் சலேசியன்சபையாரால் அங்கு ஒய்ற்றுநகரில் கட்டியெழுப்பப்பட்டிருக்கிறது. இந்த ஸ்தானமே யப்பானில் முதற்கத்தோலிக்க மேற்றிராணியாரின் ஸ்தானமாகும். புதியஆலய அபிஷேகத்தின்போது அந்நகர்மேயர் பேசியவிடத்து, 16-ம் நூற்றுண்டில் யேசுசபையார் தங்கள் தலைமைஸ்தானத்தை அங்குதானே கொண்டிருந்ததை ஞாபகத்துக்குக் கொணர்ந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாலர் பக்கம்



### அண்ணா சொல்வது

அன்பார்ந்த சகோதரரே!

யேசுக்கிறீஸ்துநாதர் உயிர்த்தெழுந்து விட்டார். அல்லேலூயா! உங்களுக்குச் சமாதானமும் சந்தோஷமும் உண்டாவதாக! நான் உங்களுக்கு ஆசிக்கிற சமாதானத்தை நீங்களும் ஒருவர்ஒருவருக்கு விரும்பிச் சோபனஞ்சொல்லி யிருப்பீர்கள்.

**போட்டி:** உத்தானதினத்திற்குச் செய்யவேண்டிய ஆயத்தம் என்னஎன்ற போட்டியைப்பற்றி உங்களிற்சிலர் எழுதிஅனுப்பி யிருக்கிறார்கள். வேறுசிலர் பேனையை வாயில்வைத்துக் கடித்துக்கொண்டு யோசிக்கிறார்கள். எழுதிஅனுப்பும்படி எல்லோரையும் கேட்கிறேன்.

உங்களன்புள்ள அண்ணா

### மோட்சத்துக்கு ஒலிபரப்பி

மூங்கில்திரை எனப்படுகிற செஞ்சீனாவில் ஒரு குருவானவர் தம்முடைய கோயிலுக்கு முன்னால் அங்கும் இங்கும் நடந்துகொண்டு செபமாலை செபித்துக்கொண் டிருந்தார். அவரைக் கவனித்துக் கொண்டிருந்த பொலிஸ் தலைவன் ஒருவன், அவர் ஏதோசெய்தி ஆகாய வசனி மூலம் (றேடியோ) இரகசியமாய் அனுப்பிக்கொண்டு இருக்கிறாரென்று அவர் மேல் குற்றஞ்சாட்டினான். குருவானவர் குற்றத்தை ஒப்புக்கொண்டு, "ஆம்! ஆனால் செய்தி மோட்சத்தில் மாத்திரம் கேட்கும்," என்றார்.

### மாதாவின் மகள் என் பாட்டி

நானும், எனது நண்பன் மங்களநாதனும் மடுமாதா சந்நிதிக்குக் கால்நடையாகப் பிரயாணமானோம். நலிவின்றி நயம்பெற முடியாது என்பது தான் எங்கள் ஏகோபித்த எண்ணம். மரியாயின் அருள் எங்கள் பிரயாணத்தை இன்பமய மாக்கியது.

மறுநாள் நாங்கள் பலமைல் நடந்து பரந்தனை அடைகையில் எங்கள் கடியாரங்கள் ஒன்பதுமணியெனக் காட்டின. எங்களை, ஏன் நாடுமுழுவதையும் சூழ்ந்திருந்த இருளும், குடிசைகளில் ஆங்காங்கு காணப்பட்ட சிறுசிறு வெளிச்சங்களும் பயங்கர இரவின் பண்பைப் பகர்ந்தன.

எங்கள் இராப்போசனத்தை முடித்துக் கொண்டு (உணவு எங்களிடம் இருந்தது.) படுக்கைக்காக நரைமூதாட்டி ஒருவரின் குடிசையை அடைந்தோம். அவர் எங்களை வரவேற்று உபசரித்துப் படுக்கையும் தந்தார். படுத்துக்கொண்டோம். ஆனால், என்மனம் நித்திரையை நாடவில்லை. காரணம், பாட்டிகளிடம் கதை கேட்பதென்றால், எனக்குப் பரமானந்தம். கதையைத் தொடக்க எண்ணி, "பாட்டி! எங்களுக்கு நித்திரை வரவில்லை; கொஞ்சநேரம் கதைக்கலாமே" என்றேன். "அதுக்கென்ன தம்பி என்றாள் பாட்டி." எனது நண்பன் சும்மா இருந்தானா? அவன் ஒரு ஆங்கிலப் பயித்தியம். "பாட்டி! நீங்கள் எங்களுக்குப் 'பெட்' எல்லாம் தந்து எங்களை 'றீற்' பண்ணினதுக்காக ரொம்பத் 'தாங்ஸ்'" என்றான். இவனுடைய சாம்பாறு மொழியைக் கேட்டு ஏனோ அந்த இனிய தமிழ்ப் பாட்டிக்குக் கோபம் வரவில்லை.

நான்—"பாட்டி, நீங்கள் ஏன் இந்த இடத்தில் தனியாக இருக்கிறீர்கள்? உங்களுக்குத் துணை ஒருவருமில்லையா?"

பாட்டி—"நான் தனியாக இருக்கிறேனா? என்ன தம்பி! சருவேசுரன் எப்பயாவது தன் பிள்ளையளைத் தனிய விடுகிறாரா? நீங்களெல்லாம் ஆரு? என்னிட பிள்ளையள்தானே. மனச்சாந்திக்கும், தேவ கட்டளைப்படி நடக்கிறதுக்கும் தனிமைதான் நல்லது. பட்டணத்தில உள்ளவங்க கூட்டங்கள் கூடியும், நாட்டியங்க, சினிமாக்க பாத்தும் எப்பிடிப் பழுதாப் போறாங்க தெரியுமா?"

நண்பன்—"தற்ச் றைட்."

நான்—"எனக்கு என்னவோ தனிமையை நினைத்தால் பயமாக இருக்கிறது பாட்டி."

பாட்டி—"நானும் ஒருகாலத்தில் உன்னைப்போல்தான் பயப்பிட்டேன். அதால பெரிய பாவத்தைக்கூடச் செய்யப் பாத்துட்டேன் தம்பி........'மரியாயே, என்நல்ல தாயாரே! இந்த ராத்திரியிலே என்னைச் சடுதி மரணத்திலும் சாவானபாவத்திலும் நின்று காத்துக்கொள்ளும்.'"

நான்—"என்ன பாட்டி! கதையை இடையிலே விட்டிட்டு மன்றாடத் தொடங்கி விட்டீர்களே."

பாட்டி—"எனக்குப் பதினெட்டு வயசானபோது என் அப்பாவும் அம்மாவும் என்னைத் தனியாக விட்டிட்டுப் போயிட்டார்கள். அவர்கள் சாக முன்னமே எனக்குக் கன்னியாஸ்திரி மடத்திலே சேர வேணுமென்று ஆசை. என்னுடைய ஆசை யெப்படி நிறைவேறும். பட்டணம் கறுப்பா, சிவப்பா, கத்தரிக்காய் மாதிரியா என்றுகூட எனக்குத் தெரியாது. இங்கே ஆறுதல் சொல்ல இனத்த ஆக்களும் இல்லை. என் கவலையை முறையிட ஒருகுருவானவரோ இல்லை. இந்தத் தேவ மந்திரந்தான் எனக்குத் துணை. அம்மா அப்பா செத்த கவலை ஒருபக்கம்; தனியா இருக்கிறதாலே வாற தொல்லையள் ஒருபக்கம். இதையெல்லாம் தொலைக்க ஓரேஒரு வழி தான் எனக்குத் தோணுச்சு.

"ஒருநாள் நான் சாகநினைத்து இந்த வளையிலே சுருக்குப் போட்டுத் தூங்கி விட்டேன். அப்பப்பா! அது எவ்வளவு கொடுமையான வேலை. கொஞ்ச நேரம் என்றால் மூச்செடுக்க முடியல்ல, தலை சுத்திச்சு. பிறகு என்ன நடந்ததெண்ணு எனக்குத் தெரியாது. கண்ண முளிச்சபோது என் குடிசையைக் காணயில்ல. ஒரு பெரிய அறையில், நல்ல கட்டிலில் படுத்திருந்தேன். அருகிலே ஒரு கன்னியாஸ்திரி நின்றா. நான் தொன்னூர் மடத்தில் இருக்கிறேன் என்றும், அன்று என்னைச் சந்திக்கவந்த என்மாமி என் நிலையைக் கண்டு என்னைக்காப்பாற்றி, இரண்டாம் பெயர் அறியாமல் இங்கு கொண்டு வந்து விட்டதாகவும் அவவிடமிருந்து அறிந்துகொண்டேன்.

"முப்பதுவருஷம் அங்கேயே தொண்டு செய்துகொண் டிருந்துவிட்டு இந்த ஊரில் உள்ள பிள்ளையளுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கிறதுக்காக இங்கே வந்திருக்கிறேன். இதுதான் தம்பி கதை. "மரியாயே, ........." பாட்டி கதையை முடித்துவிட்டு மன்றாட ஆரம்பித்தாள்."

மறுநாள் நாங்கள் மீண்டும் பிரயாணமானோம். அந்தப் பாட்டியின் அன்பான உருவும், விசேடமாக அவரின் செபமும் என் மனதில் ஆழமாகப் பதிந்துவிட்டன. மடுவிற்குச் சென்று திரும்புகையில் குருவானவர் அருள்நாதரை நாங்கள் சந்தித்தோம். அவர் கிளிநொச்சி மிசாமைச் சேர்ந்தவரென்றும், விரும்பினால் தம்முடைய மோட்டாரில் வரலாமென்றும் அன்பாகக் கூறினார். நாங்களும் அதற்கு இசைந்து அவருடன் சென்றோம். வழியில் எங்கள் முக்கிய கதையெல்லாம் பாட்டியைப்பற்றியும், அவர் சொன்ன கதையைப் பற்றியும்தான்.

கதையைக் கேட்ட அருள்நாதரும் பாட்டியைப் பார்க்க விரும்பியதால் நாங்கள் பாட்டி வீட்டை அடைந்தோம். அங்கே நாங்கள் கண்ட காட்சி திடுக்குறச் செய்தது. பாட்டி மரணத்தறுவாயி லிருந்தார். ஆனால் அவரின் வாய் அந்த மன்றாட்டத்தை மறக்கவில்லை.

அவர் இறக்கும் தறுவாயிலும் மாதா அவரைக் காத்தார். குருவானவர் கடைசித் தேவதிரவிய அனுமானம் கொடுத்தபின் நான் பருக்கிய பாலையும் அருந்திவிட்டு எனதுமடியில் நீடிய நித்திரை கொண்டா பாட்டி. பாட்டி மறைந்தாலும், பாட்டியின் தேவமந்திரம் என் மனதைவிட் டகலவில்லை. அதனால் எனக்கும் நற்பயன் கிடைக்குமென்பது திண்ணம்.

—கரம்

### அசல்

மங்களம் அநேகநாட்களாய்ப் பள்ளிக்குக் கள்ளம்போட்டுவந்தான். அதை உபாத்தியார் அவனுடைதகப்பனுருக்கு அறிவித்தார். தகப்பன் ஒருநாள் மகனைக்கூப்பிட்டுப் பலபுத்திமதி சொல்ல எண்ணி:

தம்பீ, நீ பள்ளிக்குக் கள்ளமொளிக்கிறாயாம், காரணம் என்ன?
என்று கேட்டார்

மகன்: காரணமாப்பா? வகுப்புத் துவேஷிக்கிறான்.

புத்தக மதிப்புரை

### அர்ச். சூசையப்பர்

ஆசிரியர்: வண. ஜே. அகுஸ்தீன் பெர்னாண்டோசுவாமிகள். பிரசுரம்: அர்ச். சவேரியார் அச்சகம், தூத்துக்குடி. 48 பக்கங்கள் கொண்டது. விலை பிரதி சதம் 36. தபாற்கூலி பிரத்தியேகம். கிடைக்குமிடம்: ஷை அச்சகம்.

"பரிசுத்ததந்தை 9-ம் பத்திநாதர் சூசையப்பரின்பாப்பாசர். தேவதாயார் சென்மபாவமில்லாமல் உற்பவித்துப் பிறந்த சத்தியத்தைத் திருச்சபைக்குப் பிரகடனஞ்செய்யும் சமயத்திலே இந்தப்பாப்பானவர் ஓர்பெரிய சித்திரகாரனை அழைத்துப் பரலோககாட்சியைச் சித்திரிக்கும்படி அவனுக்குச் சொன்னார். அவன் சித்திரித்துக் கொண்டிருக்கும்போது ஓர்நாள் பாப்பானவர் அருகில்சென்றார். சித்திரத்தை உற்றுநோக்கியபின் சற்றே சிந்தித்தார். பின்னர் சித்திரகாரனைப் பார்த்து; சூசையப்பர் எங்கே? என்றார். மேகத்தினுள்ளும், வெளிச்சத்தினுள்ளும் மறைந்திருக்கிறார் என்று அவன் பதில்அளித்தான். அதைக் கேட்டதேபாப்பானவர் ஓ, ஓ, மறைந்திருக்கிறாரா? இருவர் மறையவில்லை; ஒருவர்மாத்திரம் மறைந்திருக்கிறார்! தம்பி, அங்கே யேசு, இங்கே மரி, சூசைஎங்கே? இங்கேபோடுசூசையை; யேசுவின்பக்கத்தில் சூசைக்கு இடங்கொடு; அங்கேயேசு, இங்கேமரி, இங்கேசூசை; அதுதான்சரி; சூசைக்கு இடங்கொடு எனப்பகர்ந்தார்" என்னும் உணர்ச்சிததும்பும் உருக்கமானசம்பவத்தைத் தமதுமுகவுரையிற்கொண்டு சுவாமிகள் எழுதித்தந்துள்ள இந்த அழகியநூலைப் படிக்குந்தோறும் சூசைபக்தர்கள் பேருவகைஎய்துவார்களெனச் சந்தேகமின்றியே கூறலாம். பிரியமானவர், தெரிந்தெடுக்கப்பட்டவர், நீதியுள்ளவர், கீழ்ப்படிந்தவர், துன்பப்பட்டவர், பாக்கியர், சீவிக்கிறவர் என்றவாறான ஏழு புகழ்த்தம்பங்களாகிய ஏழுதலையங்கங்களின்கீழ் ஏழு வரங்களையடைந்த சூசைமுனிவரின் மகிமையை, மகத்துவத்தை, மகத்தானஸ்தானத்தை, தவறாதஅடைக்கலத்தை, குறையாதவல்லபத்தை, நிறைவானவரங்களை, அரிதான புண்ணியசீலங்களையெல்லாம் சுவாமிகள் தேம்பாவணிமுதல் பல நூல்களையும் இனிதேஆராய்ந்து அழகான தமிழிலே கவர்ச்சிகரமானமுறையிலே பல எடுத்துக்காட்டுகளுடன் சுருக்கமாகவும், வெகுசிறப்பாகவும் எடுத்துக்காட்டிக் கத்தோலிக்கதமிழ்உலகுக்கு நவமாகத் தந்திருக்கும் இந்தநூலும் அம்மாதவ வளனாரைப்பற்றி இதுகாலவரை நாம் படித்து ரசித்துள்ள அருமையான நூல்களில்ஒன்றாகும். பூவுலகதிரித்துவத்தின் மூன்றாம்ஆளாகிய சூசைமாமுனிவரின்பக்தியைப் பரப்புவதையும், அவரது வல்லமைமகிமையை அறியாதவர்கள் அறியப்பண்ணுவதையும், அவரைச்சரியாய்த் தெரியாதவர்கள் அவரைத்தெரியச்செய்வதையும் ஏகநோக்கமாகக்கொண்டுள்ள இதன் ஆசிரியரின்நோக்கம் அனுகூலமடையுமாறு சூசையப்பரின்பக்தர்களும், அவரிடம் பலவிதசகாயங்களைப் பெற்றுவருகிறவர்களும் இதனை 25, 50, 100 என்று தருவித்துத் தாங்களும்படித்து, ஏனையவர்கள்மத்தியிலும் பரப்பமுன்வர வேண்டுமென்பதே நமக்குள்ள பேராசையாகும். நமக்கு அனுப்பிய பிரதிக்காக நன்றிகூறுகின்றோம்.

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

யேசுவின் திருஇருதய இரக்கத்தினாலும், பரிசுத்தபாத்திமாமாதா, அர்ச். சூசையப்பர், பதுவைப்பதியரான அர்ச்.அந்தோனியார், அர்ச். தெரேசம்மாள் மன்றாட்டினாலும் நாங்கள் கேட்டமன்றாட்டுகள் அனுகூலமானதற்கு நன்றியறிந்ததோத்திரம். இன்னும் எங்கள் ஏனையவேண்டுதலையும் அருளும்படி மன்றாடுகிறோம்.

P. S.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சேன் வின்சேன்ற் டி போல் சபை அர்ச். சூசையப்பர் பந்தி

## 1951-ம் ஆண்டு மார்கழி மாதம் 31-ந்திகதியுடன் முடிவான 44-வதுவருட அறிக்கை

**காரியஅங்கத்தவர்கள்:** தொகை 21. இவ்வருடத்தில் நடைபெற்ற 48 கூட்டங்களில் சராசரி 14 பேர் சமுகங் கொடுத்திருக்கின்றனர்.

**உபகரிப்பு:** மகிமைஅங்கத்தவர்களும், உபகாரிகளும் சென்றவருடத்திலும்பார்க்க 52 ரூபா 05 சதம் அதிகமாகஉபகரித்து எம்மை ஊக்கித்திருக்கின்றனர். அடைந்துகொண்ட நன்மைகளுக்கு நன்றியறிதலாக அர்ச். அந்தோனியார் தருமஅப்பத்துக்குக் காணிக்கையாக அனுப்பப்பட்டபணம் சென்றவருடத்திலும் 287 ரூபா 65 சதத்தால் அதிகரித்திருக்கிறது. கடந்த வருடத்திலும்பார்க்க எமதுவரவு முழுத்தொகை 517 ரூபா 36 சதத்தால் அதிகரித்திருப்பது, காரியஅங்கத்தவர்களுக்கு அகமகிழ்ச்சியைக் கொடுத்திருப்பது மாத்திரமல்ல, உபகாரிகளுக்காகவும், அபிமானிகளுக்காகவும் விசேடவிதமாக மன்றுடுவதற்குப்போதவலையும் கொடுத்திருக்கின்றது. இவ்வருடத்தில் மொத்தமாகக்கிடைத்த 3,609 ரூபா 10 சதத்தைக்கொண்டு 106 தனியாட்களைக்கொண்ட 26 குடும்பங்களுக்கு வாராந்தஉதவியும், தனிப்பட்டோரைக்கொண்ட 95 குடும்பங்களுக்குத் தருணஉதவியும் வழங்கியிருக்கின்றோம். அன்றி, ஒருசிலரின் பிரேதஅடக்கத்திற்கும், சிலவறியவர்களின் வீடுகள் வேய்வதற்கும், சிலர் வியாபாரம் தொடங்கவும் உதவிபுரிந்திருக்கின்றோம். இன்னும் நல்லூர் மீசாம் வேதப்பரப்புதல் வேலைக்கும், வயோதிபர்சாலைக்கும் பணம் உபகரித்திருப்பதன்றி உபகாரிகளுக்காகப் பூசைகளும் செய்வித்திருக்கின்றோம்.

**ஏழைகளைத்தரிசித்தல்:** எம்மால் உதவிபெறும் இல்லங்களுக்கும், ஞான உதவிகளைத்தேடிநிற்கும் இல்லங்களுக்கும் 1,849 முறை சந்திப்புகள்செய்து எம்மாற்செய்யக்கூடிய ஆன்மசரீரஉதவிகள் செய்திருக்கின்றோம்.

**ஞான வேலைகள்:** நாம் எமது சகோதரர்மட்டிற் செய்யவேண்டிய ஞானவேலைகளை 697 முறை ஆஸ்பத்திரி நோயாளிகளைத் தரிசித்தும், 19 முறை மறியற்காரர்களைத் தரிசித்தும், 570 பத்திரிகைகள் வாசிக்கக்கொடுத்தும் ஓளவிற்செய்து வந்திருக்கின்றோம்.

**இலவச புத்தகசாலை:** கடந்தவருடத்தில் இப்புத்தகசாலையில் இருந்து 120 புத்தகங்கள் இரவலாக வாசிக்கக் கொடுத்திருக்கிறோம். புத்தகசாலையில் போதியபுத்தகங்கள் இல்லாமை மிகவும் வருத்தத்துக்குரியது.

**அர்ச். அந்தோனியார் தருமஅப்பக் காணிக்கைகளாக:** 2,268 ரூபா 30 சதம் கிடைத்தது. இத்தொகை சென்றவருடத்திலும் 287 ரூபா 65 சதத்தால் அதிகரித்துள்ளது. அர்ச். அந்தோனியாருடைய மன்றுட்டினுல் பெருந்தொகையானவர்கள் ஆன்மசரீர நன்மைகள் அடைந்துவருகிறார்கள் என்பது, அவர்கள் அனுப்பிய காணிக்கைத் தொகைகளில் இருந்து நாம் அனுமானிக்கக் கூடியதாக இருக்கின்றது. அர்ச். அந்தோனியாருடைய நாமம் எங்கும்புகழப்படுவதாக.

**நத்தார்த்தண்டல்:** இவ்வருடத்தில் நத்தார்த் தண்டலாக 377 ரூபா 45 சதம் சேர்க்கப்பட்டது. இப்பணத்திலும் கூடுதலாக, அஃதாவது 378 ரூபாவுக்கு நத்தார் உபகரிப்பின்போது மாத்திரம் வஸ்திரம் உதவியுள்ளோம்.

**அர்ச். வின்சேன்ற் டிபோல் திருநாள்:** எமது பாதுகாவலராகிய அர்ச். வின்சென்ற் டி போல் திருநாளானது வழமைபோல ஆடிமாதம் 19-ந்திகதி எமது கூட்டக்கோவிலில் நடைபெற்றது.

**நன்றியுரை:** எமது முயற்சிக்கு ஊக்கமளித்து, உதாரகுணத்தோடு பணஉதவிசெய்து எம்மைக்கண்காணித்துவருகின்ற மகாவந். யாழ்ப்பாண மேற்றிராணி ஆண்டவருக்கும், அந்தரங்கமான ஆர்வங்காட்டி எங்களுக்காக உழைத்துவரும் வண. கட்டளைச் சுவாமியாருக்கும், எமது சகோதரபந்தியினர்க்கும் எங்கள் மனப்பூர்வமான நன்றியைச் சமர்ப்பிக்கின்றோம். எங்களையும், எங்கள் வேலைகளையும் ஆசீர்வதித்து அருள்செய்கின்ற வல்லமைமிக்க தேவனுக்கு எங்கள் வணக்கம் என்றும் உரியதாகுக.

**கவனிப்பு:** இத்தருமசபைக்கு உபகரிக்கும் உபகரிப்புகளைப் பின்வரும்விலாசத்துக்கு அனுப்புக.

The Director
S. V. P. St. Joseph's Conference,
Bishop's House, Jaffna.

### வரவு செலவு விபரம்

### 1-1-51—31-12-51

#### வரவின் விபரம்

| | |
|---|---|
| 1-1-51 கையிருப்பு ... | 60-66 |
| மகிமைஅங்கத்தவர்களால் ... | 560-90 |
| உபகாரிகளால் ... | 44-25 |
| காரியஅங்கத்தவர்களால் வாராந்தக்கூட்டங்களிற் சேர்ந்தது ... | 33-45 |
| அர்ச். அந்தோனியார் தருமஅப்பக்காணிக்கையால்வந்தது ... | 2,268-30 |
| உண்டியலிற் சேர்ந்தது ... | 22-77 |
| பிடியரிசிக்காகச் சேர்க்கப்பட்டது ... | 91-02 |
| நத்தார்த் தண்டலால் வந்தது ... | 377-45 |
| நத்தாருக்காகச்சேமித்தது | 150-30 |
| ஆகமொத்தம் | 3,609-10 |

#### செலவின் விபரம்

| | |
|---|---|
| கிழமைவீதம் பணமாக உதவியது ... | 1,812-63 |
| வஸ்திரமாக ... | 433-85 |
| வியாபாரந்தொடங்க ... | 20-00 |
| பிரேதஅடக்கததுக்கு ... | 8-50 |
| வயோதிபர்சாலைக்கு ... | 60-00 |
| உபகாரிகள் பூசைக்கு ... | 30-00 |
| நல்லூர்மீசாம் வேதப்பரப்புதல் வேலைக்கு ... | 30-00 |
| அநாதபிள்ளைகளுக்குப் புத்தகம், நத்தார்உபகரிப்பு, மறியல்வீடு முதலியவற்றிற்கு ... | 95-90 |
| பத்திரிகை, துண்டுப்பிரசுரம், அறிக்கை முதலிய அச்சுச் செலவுகளுக்கு ... | 262-00 |
| முத்திரை, காகிதஉறை முதலியவற்றிற்கு ... | 76-40 |
| உபதேசியார் சம்பளம் ... | 540-00 |
| நத்தாருக்காகஎடுத்தது ... | 150-30 |
| கையிருப்பு ... | 89-52 |
| ஆகமொத்தம் | 3,609-10 |

### ஒரே கப்பலில் வந்தன

ஒரேயொரு கப்பலிலே எக்காலத்திலாவது இலங்கைக்குக் கொண்டுவரப்பட்ட மிகப்பெருந்தொகையான உணவுப்பொருட்களும், மோட்டர்ரதங்களும், கட்டடசாமான்களும், பிறவுமாகப் 10,083 தொன்நிறைகொண்ட இவைகள் சென்ற 7-ந்திகதி மற்றுரு என்னும்கப்பலில் கொழும்பு வந்துசேரலாயின. இவற்றிலே 568 கார்களும், வேறினமான 8 மோட்டர் ரதங்களும், 300 தொன் றெயில்களும், 2,700 தொன் சீமெந்தும், 1,000 தொன் சீனியும், 160 தொன் எண்ணெயும், இரு றெயில் பெட்டிகளும், அடங்கியுள்ளன.

## பரிசுத்தசெபமாலைப் படையணி

### 27-3-52-இல் அங்கத்தவர் தொகை

| | |
|---|---|
| கண்டி மேற்றிராசனம் | 3,027 |
| காலி ,, | 215 |
| கொழும்பு ,, | 10,317 |
| சலாப ,, | 691 |
| திரிகோணமலை ,, | 780 |
| யாழ்ப்பாண ,, | 8,005 |
| இந்தியாவும் மலாயாவும் | 416 |
| மொத்தம் | 23,451 |

படையணி நாளாந்தம் விருத்தியடைவதைக் காண்பது மனோரம்மியமே. ஆயின் படையணியின் ஸ்திரம், அதன்பெலன், அங்கத்தவர் தொகையிலல்ல, கடமையின் பிரமாணிக்கத்தில் தங்கியுள்ளது. இவ்வுண்மையை அங்கத்தவர் ஒவ்வொருவரும் மனத்திருத்தவேண்டும். இச்செபச்சேனை ஒருஞானக் கூட்டுறவியக்கம். இத்தால் வந்துறும் ஞானப்பலன் ஒவ்வொன்றும் சேனை அங்கத்தவரின் பொதுச்சொத்து. ஒவ்வொருவருக்கும் அதிற்பங்குண்டு. எனவே, படைவீரரே! நீர் உமது பொருத்தனையிற் பிரமாணிக்கமாயிருப்பீரேல், மற்றும் 23,451 ஞானவீரரின் பிரமாணிக்க நற்கிரிகைகளாம் ஞானநன்மைகளிற் பங்கடைபவராவீர்.

விருத்தியாளர் இவ்வுண்மையை அங்கத்தவருக்கு எடுத்துரைப்பார்களாக. தங்கள் நன்மாதிரிகையாலும் தூண்டிவிடுவார்களாக. அமலோற்பவநாயகியின் மாசற்றஇருதயத்துக்கு உங்களனைவரையும் ஒப்படைத்துநிற்கும்

அதிபர்,
பரிசுத்த செபமாலைப்படையணி
கற்றன், இலங்கை.

### திருமண வைபவம்

மானிப்பாயிலே பலராலும் அறியப்பட்டவரும், றெயில்வேகாட்டாயிருந்து இளைப்பாறியவரும், சென்றதைமாதம் மோட்டர்விபத்துக்குள்ளாய்க் காலஞ்சென்றவருமான திரு. பிலுப்மனவல் பிள்ளையின் சிரேஷ்டபுதல்வன் திருநிறைசெல்வன் யோண்செல்வராசாவுக்கும், போயிட்டியில்பலராலும், அறிப்பட்ட பிரபலவியாபாரியார் திரு. மரியாம்பிள்ளை கயித்தாம்பிள்ளையின் ஏகபுதல்வி திருநிறைசெல்வி லூர்த் அன்னரத்தினத்துக்கும் சென்ற 21-3-52 இல் போயிட்டி அர்ச். லூர்த்துமாதா கோவிலில் வண. வறிக்கோ சுவாமியாரால் மெய்விவாகத் திருச்சடங்கு நிறைவேறியது. பூசைமுடிவில் புதுத்தம்பதிகள் மலர்மாலைசூட்டிப் பிரதிமைப்படம் பிடிக்கப்பட்டு நன்குஉபசரிக்கப் பெற்றார்கள். இப்புதுதம்பதிகள் நீடூழி வாழ இறைவன் அருள்பாலிப்பாராக.

—நிருபர்.

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

யேசுவின் திருஇருதய இரக்கத்தினுலும், அர்ச். பனிமயமாதா, அர்ச். யூதாததேயு, சகலஅர்ச்சியசிஷ்டர்களுடைய வேண்டுதலாலும் என்மருமகளுடைய வியாதி முற்றிலும்பூரணசுகம் அடைந்ததற்காக என்இருதய பூர்வமாகநன்றி சமர்ப்பிக்கின்றேன். மேலும் என்மகனுக்கு நல்லமனைதையும், ஓர் வேலையையும் கொடுக்குமாறு மன்றுடுகிறேன்.

சின்னம்மாள் கோமஸ்
முகத்துவாரம்

—ஸ்பானியதேசத்தின் குடிசனத்தொகை 2 கோடியே 80 லட்சம்பேர். இவர்களில் முப்பதினுயிரம் பேர்தவிர மற்றவர்கள் எல்லோரும் கத்தோலிக்கரே. பிறசமயத்தவர்களான முப்பதினுயிரம் பேருள்ளும் புரொட்டஸ்தாந்தர் இருபதினுயிரம்பேர் இவர்களிலும் அரைவாசிப்பேர்வரையில் பிறநாடுகளைச்சேர்ந்தவர்கள்.

## வெந்தீஸ் விற்பனை

சனப்புழக்கம் நிறையப்பெற்று யாழ்ப்பாணப் பட்டணத்தின் மத்தியஸ்தானமாயுள்ள குருநூர் என்றழைக்கப்படும் கரையூரிலே பிரசித்தசாய்ப்புகள், சந்தைகள், கல்லூரிகள், படக்காட்சிநிலையங்கள் முதலியவேண்டற்பாலன வசதிகள்யாவற்றிற்கும் உபயோகமாகவுள்ளதும் சவிரிமுத்து முதலியார் ரோட்டில் $2\frac{1}{2}$ பரப்பு விஸ்தாரமுடைய ஓர் காணியும் அதன் கண் கட்டப்பட்டுள்ள "மார்கறெற் வில்லா" என்னும் அலங்காரமான ஓர்வீடும்

நிகழும் 1952-ம்ஆண்டு சித்திரை 26-ந் திகதி சனிக்கிழமை பிற்பகல் 4-30 மணியளவில் அந்தஇடத்தில் நின்றுதானே பிரசித்த ஏலத்தில் விற்பனவு செய்யப்படும். வேறுவிபரங்கள் தேவையானோர் கீழ்க்காட்டப்பட்டிருக்கும் விலாசத்துக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

**Vincent S. Amerasingham**
Auctioneer, Valuer & Broker.

Eravur
Chenkalladi (E. P.)
15- 4-1952.

## அறிவித்தல்

இல. 8722

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்

1. சுதுமலை, செல்லையா சின்னையா
2. ஆனைக்கோட்டை, தொம்மை நீக்கிலாப்பிள்ளை
3. ஷை ஊர் பாவிலு சூசைப்பிள்ளை
4. கொக்குவில்மேற்கு, குருசு வரப்பிரகாசம் — வழக்காளிகள்

எதிராக

மானிப்பாய்க் கிராமச்சங்கம் —எதிரி

சுதுமலை, ஆனைக்கோட்டை, கொக்குவில் மேற்குக்கிராமங்களில் வசிக்கும் மீன்பிடித் தொழிலாளர்களுக்கு.

இத்தால்அறிக:—

மேற்கூறிய வழக்காளிகளால் தங்கள் சார்பாகவும் மேற்கூறிய எல்லைக்குளிருக்கும் ஏனைய மீன்பிடித்தொழிலாளர் சார்பாகவும் ஆனைக்கோட்டைக் கடற்கரையில் "கரையாம்பிட்டி அல்லது காக்கைதீவு அல்லது வல்லவட்டன்துறை" என்னும் பகுதியில் வள்ளங்களைக் கொண்டுவந்துவிடும் உரிமையையும், வலைகாயப்போடும் உரிமையையும், மீன்பிடித் தொழிலுக்குரிய மற்றும் உரிமைகளையும், மேற்படி எதிரிக்குமாறுகத் தீர்ப்பளிக்கவும், தற்போது எதிரி கட்டுவிக்கும் கட்டிடத்தை இடிக்கவும் இவ்வழக்குத் தொடரப்பட்டிருக்கின்றது.

மேற்கூறிய எதிரிசார்பில் மேற்கூறிய கிராமவாசிகளின்சார்பாக வழக்குத் தொடர்வதற்கு இக்கோடு 1952-ம் ஆண்டு பங்குனிமாதம் 26-ந் திகதி உத்தரவளித்திருக்கின்றது.

1952-ம் ஆ மார்ச் மீ 28-ந் திகதி
கோட்டுக் கட்டளைப்படி
**T. Sivasubramaniam**
சக்கடத்தார்

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

யேசுவின் திருஇருதயத்தின் அன்பினுலும், மரியாயின் மாசற்றஇருதயத்தின் வேண்டுதலினுலும், அர்ச். யூதாததேயு, அர்ச். ஜியார்ஜியார், அர்ச். குழந்தை தெரேஸ், சங். அல்போன்ஸா அம்மாளுடைய மன்றுட்டினுலும் என்மூத்தமகனுக்குக் கப்பலில் ஓர் வேலைகிடைத்ததற்காகவும், எனக்குச்சம்பளஉயர்வு கிடைத்ததற்காகவும் என்இருதயபூர்வமாக நன்றி சமர்ப்பிக்கின்றேன். என்இரண்டாவது மகனுக்கும் கூடியசீக்கிரம் நல்லஒருவேலை கிடைக்கும்படியாகவும் என்பிள்ளைகள் எல்லோரும் தெய்வபக்தியிலும் புண்ணியசாங்கோபாங்கத்திலும் ஓங்கிவளரும்படியாகவும் யேசுவின்திருஇருதயத்தை இரந்துமன்றுடுகிறேன்.

மரியதாஸ் கோமஸ்
கொழும்பு

Printed and Published for the Proprietor by BASTIAMPILLAI SANTIAGOEPILLAI residing at 39, Main Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, April 17-1952.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org